வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No.: P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 14.11.2024 வியாழக்கிழமை இதழ் : 318 பக்கங்கள் : 12

# பாராளுமன்ற தேர்தல் இன்று!

## தவறாது வாக்களியுங்கள்

கொழும்பு, நவம்பர் 14

**சுதந்திர இலங்கையின் 17ஆவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் இன்று வியாழக்கிழமை நடைபெறுகிறது. பொது மக்கள் காலை 7 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை தமது வாக்குகளை செலுத்த முடியும்.**

இந்தத் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயி ரத்து 354 பேர் தகுதி பெற்றுள்ளனர். இவர்கள் வாக்களிக்க வசதியாக நாடு முழுவதும் 13 ஆயிரத்து 421 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இன்றைய தினம் வாக்களிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்துவிட்டன என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. வாக்களிக்கச் செல்லும்போது வாக்காளர் அட்டையை கொண்டு செல்ல வேண்டும். வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் இன்றைய தினமும் தமது உபதபால் நிலையத்தில் வாக்காளர் அட்டைகளை பெறமுடியும். வாக்களிப்பதற்கு

11

## 3,359 தேர்தல் முறைப்பாடு

கொழும்பு, நவ. 14

நாட்டில் தேர்தல் விதி மீறல்கள் மற்றும் வன்முறை சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் 3 ஆயிரத்து 359 ஆக அதிகரித்துள்ளன.

பாராளுமன்றத் தேர்தல் இன்று நடைபெறுகிறது. இந்த நிலையில், தேர்தல் அறிவிக்கப்பட்டது முதல் நேற்று முன்தினம் வரையிலான காலப்பகுதியில் இந்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 956 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு

11

## தேர்தலுக்கு இடையூறுகளை ஏற்படுத்தாது செயல்படுங்கள்!

### தேர்தல்கள் திணைக்களம்!

கொழும்பு, நவ. 14

இன்றைய தினம் நடைபெறும் பாராளுமன்றத் தேர்தலுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் அனைவரும் செயல்பட வேண்டும் - என்று என்று தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறீ ரத்நாயக்க கேட்டுள்ளார்.

அத்துடன், தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன. மக்கள் தாமதமின்றி தமது வாக்குகளை செலுத்த வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இன்று காலை 7 மணிமுதல் பிற்பகல் 4 மணி

11

## வாக்களிப்பதற்கு விடுமுறை வழங்காவிடின் ஒரு மாத சிறை

### பவ்ரல் அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 14

இன்று நடக்கும் பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கு அரச, தனியார் நிறுவனங்கள் தமது சகல ஊழியர்களுக்கும் விடுமுறை அளிக்க வேண்டும். விடுமுறை வழங்காத நிறுவனத்தின் பிரதானிக்கு ஒரு மாத காலம் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க

11

## தமிழ் மக்கள் ஒரு தேசமாக திரண்டு வாக்களிக்க வேண்டும்!

### கனடிய தமிழர் தேசிய அவை அழைப்பு

றொறன்ரோ, நவ. 14

தமிழ் மக்கள் ஒரு தேசமாக திரண்டு தமிழினத்தின் கூட்டுநலனை முன்னிறுத்தி தமது வாக்குகளை பயன்படுத்த வேண்டும் என்று கனடிய தமிழர் தேசிய அவை தெரிவித்துள்ளது.

நாட்டின் பாராளுமன்றத் தேர்தல் இன்று நடைபெறுகிறது. இதையொட்டி அந்த அமைப்பு விடுத்த விசேட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.


அந்த அறிக்கையில்,

தமிழ் மக்கள் வழக்கமாக, காலம் காலமாக இடம்பெற்றுவரும் தேர்தல்களில், தனிமனித நலனை முன்னிலைப்படுத்தாது, தமிழ்த் தேசிய இனத்தின் கூட்டு நலனை முன்னிலைப்படுத்தி, தமது வாக்குகளை செலுத்தி, தமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து வந்துள்ளார்கள்.

இதே போல, இன்றைய தினம் நடைபெறும் பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் ஒரு தேசமாக திரண்டு 75 ஆண்டுகளுக்கு மேலாக தொடரும் மாபெரும் வீரமும் உயரிய தியாகமும் நிறைந்த விடுதலைப் போராட்டத்துக்கும் மத்தியில், இன்றும் ஓயாது தொடர்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களின் உரிமைக்கான பயணத்துக்கு வலுச்சேர்க்கக்கூடிய பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பார்களென எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையில் தொடர்ந்து ஆட்சிக்கு வருகின்ற

11



இன்றைய பாராளுமன்றத் தேர்தலுக்காக யாழ். மாவட்டத்தின் வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்படும் காட்சி...!

படம் - ஐ. சிவசாந்தன்

## அறுகம் குடாவுக்கான பயண எச்சரிக்கை தளர்த்தப்பட்டது

கொழும்பு, நவ. 14

அறுகம் குடாவுக்கு விடுக்கப்பட்ட பயண எச்சரிக்கையை தளர்த்தியுள்ளதாக அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

அறுகம் குடா, எல்லே பகுதிகளுக்கு சுற்றுலா பயணிகளை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தப்படும் அச்சம் இருப்பதாக அமெரிக்கத் தூதரகம் புலனாய்வு தகவல்களை மேற்கோள் காட்டி சுற்றுலா பயணிகளை அங்கு செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்தது.

இதைத் தொடர்ந்து பிரிட்டன், அவுஸ்திரேலியா உள்ளிட்ட 5 நாடுகள் பயண எச்சரிக்கையை விடுத்தன. இந்த நிலையில், அறுகம் குடாவில் தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டினர் என்று சந்தேகத்தில் 6 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

11

## மட்டக்களப்பிலிருந்து யாழ். வந்தவர் விபத்தில் மரணம்!

யாழ்ப்பாணம், நவ. 14

மரணச் சடங்கில் பங்கேற்பதற்காக மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த பெண் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - மாமாங்கத்தை சேர்ந்த குகதாஸ் விஜிதா (வயது 40) என்பவரே உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த பெண்ணும் அவரின் உறவினர்களும் சிலர், உரும்பிராயில் உறவினர் ஒருவரின் மரணச் சடங் கில் கடந்த 10ஆம் திகதி பங்கேற்றனர். அன்றைய தினமே வானில் வீடு திரும்பிக்

11

## பங்குச் சந்தையில் மிகப்பெரும் வளர்ச்சி!

கொழும்பு, நவ. 14

கொழும்பு பங்கு சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் நேற்றையதினம் 136.20 புள்ளிகளால் அதிகரித்தது. இதன்படி, நேற்றைய பரிவர்த்தனைகளின் முடிவில், அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 13000 ஆம் புள்ளிகளை தாண்டியது.

முன்னதாக, இந்த எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி பதிவாகியிருந்தது.

நேற்றைய பரிவர்த்தனைகளின் முடிவில், அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 13,125.19 புள்ளிகளாக பதிவு செய்யப்பட்டதன், மொத்த புரள்வு 6.9 பில்லியன் ரூபாயாக பதிவாகின என்று கொழும்பு பங்கு சந்தை குறிப்பிட்டுள்ளது. (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் தேர்தல் ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், நவ. 14

பாராளுமன்றத் தேர்தல் நாளை இடம்பெறவுள்ள நிலையில் யாழ் மாவட்ட வாக்கு எண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து இருந்து அனைத்து வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குப் பெட்டிகள் எடுத்து செல்லும் பணிகள் நேற்று காலை 8 மணியிலிருந்து இடம்பெற்றன.

வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குபெட்டிகள் அரச ஊழியர்களின் பங்களிப்பில் பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டன.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு பகுதிகளில் வாக்குப் பெட்டிகளை எடுத்து செல்ல போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டன. இதேவேளை, அசம்பாவிதங்களை தவிர்க்கும் நோக்குடன் விசேட அதிரடி படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கிளிநொச்சியிலும் தேர்தலுக்கு ஏற்பாடு

கிளிநொச்சி, நவ. 14

கிளிநொச்சி மாவட்டத்தில், பாராளுமன்றத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், 108 வாக்களிப்பு நிலையங்களும், 10 வாக்கு எண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதாகவும், மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தெரிவித்தார்.

அந்தவகையில், கிளிநொச்சி மாவட்டத்தில், ஒரு இலட்சத்து 907 வாக்காளர்கள், வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன், இன்று காலை, வாக்குக் பெட்டிகள், பேருந்துகளில் உரிய வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும், மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் குறிப்பிட்டார். (அ)

# முன்னாள் அமைச்சர்களின் இல்லங்களுக்கு பாதுகாப்பு!

கொழும்பு, நவ. 14

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு விடுத்த கோரிக்கையின் பிரகாரம் முன்னாள் அமைச்சர்கள் தங்கியிருந்த உத்தியோகபூர்வ இல்லங்களின் பாதுகாப்புக்காக இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, 30 உத்தியோகபூர்வ இல்லங்களின் பாதுகாப்புக்கு 50இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று இராணுவ பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் தகுதியானவர்களிடம் ஒப்படைக்கும் வரை இந்த பாதுகாப்பு திட்டம் நடைமுறையில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இந்திய நீர்மூழ்கி புறப்பட்டது

கொழும்பு, நவ. 14

இந்திய கடற்படைக்குச் சொந்தமான நீர்மூழ்கிக் கப்பல் ஐ.என்.எஸ் வேலா நேற்று நாட்டிலிருந்து புறப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படையினரின் வழியனுப்பு நிகழ்வுடன் நீர்மூழ்கிக் கப்பல் நாட்டை விட்டு புறப்பட்டுச் சென்றது.

முன்னதாக இந்திய நீர்மூழ்கிக் கப்பலான ஐ.என்.எஸ் வேலா கடந்த 10 ஆம் திகதி நாட்டிற்கு வரகை தந்நது.

இந்திய நீர்மூழ்கிக்கப்பலில் பயணித்திருந்த இந்திய கடற்படைக் குழாமினர் இலங்கை கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நட்பு ரீதியான கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொண்டிருந்ததுடன் நாட்டின் முக்கிய சுற்றுலாத் தளங்களுக்கும் பயணித்திருந்தனர். (அ)

# உடுப்பிட்டி மகளிர் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 14

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் 2024 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

கல்லூரியின் ராஜேந்திரசிங்கம் மண்டபத்தில் பாடசாலை அதிபர் சுப்பிரமணிய குருக்கள் தலைமையில் காலை நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் விழா மண்டபம் வரை அழைத்துச் செல்லப்பட்டனர்.

தொடர்ந்து மங்கல விளக்கேற்றலுடன் ஆசி உரை, வரவேற்பு உரை, வரவேற்பு நடனம், என்பன இடம்பெற்றன.

நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பல் வைத்திய நிபுணர் மிதுலா விமல்நாத் பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன் , முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி அனந்தராசா, முன்னாள் வலய கல்விப் பணிப்பாளர் தமிழ்மாறன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், அயல் பாடசாலைகளின் அதிபர் ஆசிரியர்கள், என பலரும் கலந்து கொண்டனர். (அ)



# இன ஐக்கியத்தை கட்டி எழுப்பும் செயலமர்வு யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம், நவ. 14

தேசிய சமாதான பேரவை, சொண்ட் நிறுவனத்துடன் இணைந்து, சமூக நல்லுறவு, சகவாழ்வு, நல்லிணக்கம் சமாதானம் ஆகியவற்றோடு, இன ஐக்கியத்தை கட்டி எழுப்பும் நோக்கில் நடத்திய செயலமர்வு, யாழ்ப்பாணத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில், இன மற்றும் மதங்களுக்கு இடையிலான பதற்றநிலை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதில், யாழ்ப்பாண மாவட்ட சர்வமத குழு உறுப்பினர்கள், இளைஞர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் பெண் பிரதிநிதிகள், அரச உத்தியோகத்தர்கள், மதகுருமார்கள், சமூக மட்ட பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

யாழ்ப்பாண மாவட்ட சர்வ மத குழுவின் இணைப்பாளர் செல்வி ஜென்சி விக்டரின் ஒழுங்குபடுத்தலில் கலந்துரையாடல் ஆரம்பமானதுடன், தேசிய சமாதான பேரவையின் திட்ட உத்தியோகத்தர் முனீப் ரஹ்மான் வழிநடத்தினார்.

மத தலைவர்கள், யாழ். மாவட்ட சர்வ மத குழுவினர், தமது கருத்துக்களை பதிவு செய்தனர். (அ)

# தேர்தல் வாக்குப் பெட்டிகளை ஏற்றிச் சென்ற பஸ் விபத்து!

கொழும்பு, நவ. 14

காலி சவுத்லாண்ட் பெண்கள் கல்லூரியிலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகளை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று வீதியில் சென்ற காருடன் மோதி விபத்திற்குள்ளானது.

நேற்று காலை புஸ்ஸ - வெல்லமடை பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

பின்னர், பொலிஸார் தலையிட்டு, விபத்துக்குள்ளான பஸ்ஸில் இருந்த வாக்குப் பெட்டிகளை வேறு வாகனத்தில் கொண்டு செல்ல ஏற்பாடு செய்தனர்.

மேலும், இந்த விபத்தில் எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. (அ)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
14.11.2024 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அரசியல் கைதிகள் குறித்த அநுரவின் வாக்குறுதி

இலங்கையில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று முன்னாள் நீதியமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ கூறியிருக்கிறார். சில தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தல் பிரசாரங்களுக்காக வடக்குக்கு வந்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க சட்டமா அதிபருடன் ஆலோசனை கலந்து தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு தனது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று வழங்கிய உறுதிமொழிக்கு எதிர்வினையாகவே இதை ராஜபக்ஷ கூறினார்.

நீதியமைச்சர் பதவியில் இருந்து தான் விலகிய நேரத்தில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட 11 பயங்கரவாதிகளே சிறையில் இருந்ததாகவும் அவர்களில் 1996 ஜனவரி இலங்கை மத்திய வங்கி குண்டுத் தாக்குதல், 1996 ஜூலை தெகிவளை ரயில் குண்டுவெடிப்பு மற்றும் 2008 பிலியந்தலை பஸ் நிலையக் குண்டுவெடிப்பு ஆகிய சம்பவங்களில் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களும் அடங்குகின்றனர் எனவும் அதற்கு மேலதிகமாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 13 சந்தேகநபர்கள் தடுப்புக்காவலில் இருக்கின்றனர் என்றும் ராஜபக்ஷ கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு நேற்றைய தினம் கூறினார்.

உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டவர்கள் தொடர்பில் சட்டமா அதிபர் எந்தத் தீர்மானத்தையும் எடுக்கமுடியாது. கொடூரமான குற்றச் செயல்களுக்காக குற்றவாளிகளாகக் காணப்பட்ட பிறகு நீண்டகால சிறைவாசம் அனுபவித்து வருவோர் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து ஜனாதிபதி அறிக்கை ஒன்றை கோரவேண்டும். ஜனாதிபதி விரும்பினால் அவர்களுக்கு மன்னிப்பை வழங்கமுடியும். முன்னாள் பயங்கரவாதிகளுக்கு முன்னைய ஜனாதிபதிகள் மன்னிப்பு வழங்கிய சந்தர்ப்பங்கள் உண்டு என்று சட்டநிபுணரான ராஜபக்ஷ விளக்கமளித்திருக்கிறார்.

வடக்கில் பாதுகாப்பு காரணங்களுக்காக இராணுவம் கையகப்படுத்திய குடிமக்களின் காணிகளை விடுவிப்பதற்கும் தனது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று ஜனாதிபதி திஸநாயக்க வழங்கிய வாக்குறுதி தொடர்பில் கருத்துத் தெரிவித்த ராஜபக்ஷ அந்த விவகாரம் குறித்து பாதுகாப்பு அமைச்சே நிலவரத்தை தெளிவுபடுத்த வேண்டும் என்று கூறினார்.

அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர் என்று ஜனாதிபதி திஸநாயக்க மாத்திரமல்ல, ஜே. வி. பி. ஃ தேசிய மக்கள் சக்தியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான பிமல் ரத்நாயக்கவும்கூட வவுனியாவில் கடந்த மாதம் கூறியிருந்தார்.

இலங்கையில் அரசியல் கைதிகள் இல்லை என்று விஜயதாஸ ராஜபக்ஷ மாத்திரமல்லர், வேறுபல தென்னிலங்கை அரசியல்வாதிகளும் அவ்வப்போது கூறியிருக்கிறார்கள். சில வருடங்களுக்கு முன்னர் (2021ஆம் ஆண்டு என்று நினைவு) இலங்கையில் உள்ள "அரசியல் கைதிகளின்" எண்ணிக்கை தொடர்பாக இலங்கை தமிழ் அரசு கட்சியின் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் சபையில் கேள்வியெழுப்பியபோது அன்றைய நீதியமைச்சர் அலி சப்ரி இலங்கை சிறைகளில் அரசியல் காரணங்களுக்காக எவரும் அடைத்து வைக்கப்பட்டிருக்கவில்லை என்று பதிலளித்தார்.

இலங்கையில் அரசியல் கைதிகள் இல்லை என்று இரு முன்னாள் நீதியமைச்சர்கள் எந்த அடிப்படையில் கூறினார்கள்? அரசியல் கைதிகள் என்ற பதத்துக்கு அவர்கள் கூறும் வரைவிலக்கணம் என்ன? என்ற கேள்விகள் குறித்து ஆராய்வதற்கு இங்கு இடவசதிபோதாது. ஆனால், வடக்கில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளுக்கு உடனடியாகவே விஜயதாஸ ராஜ பக்ஷ எதிர்வினையாற்றியமையை நோக்குவதே முக்கியமானது.

தேசிய இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி திஸநாயக்கவிடமிருந்தோ அல்லது தேசிய மக்கள் சக்தியிடமிருந்தோ நேர்மறையான சமிக்ஞை எதுவும் வராமல் இருப்பது குறித்து தமிழ் மக்கள் விசனமடைந்திருக்கும் நிலையில், அவர்களின் மனக்குறைகளை போக்குவதற்கு ஜனாதிபதியால் எடுக்கப்படக்கூடிய எந்தவொரு சிறிய நடவடிக்கையையும்கூட உடனடியாகவே எதிர்ப்பதற்கும் அது தொடர்பில் சிங்கள மக்கள் மத்தியில் தவறான எண்ணத்தை உருவாக்குவதற்கும் தென்னிலங்கையில் அரசியல்வாதிகள் 'ஆவலுடன்' காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது பிரகாசமாகத் தெரிகிறது.

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2024

"மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்துகொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்."
- நி.தி.மிரோவ் (அமெரிக்க எழுத்தாளர்)




## வலய உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் உரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 14

இன்று நடைபெறும் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக வலய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ. கி. அமல்ராஜ் அவர்களால் வலய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான மேலதிக அறிவுறுத்தல்களை வழங்கினார். (ஐ-05)



## வாக்கு பெட்டிகள் படகு மூலம் தீவகத்தை சென்றடைந்தன!



யாழ்ப்பாணம், நவ. 14

யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவை தீவு ஆகியவற்றுக்கு விசேட படகுகள் மூலம் வாக்குப் பெட்டிகள் நேற்று கொண்டு செல்லப்பட்டன.

தேர்தல் மத்திய நிலையமாக செயல்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இருந்து நேற்று புதன்கிழமை இந்த வாக்கு பெட்டிகள் பொலிஸ் பாதுகாப்புடன் பேருந்துகளில் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் குறிகாட்டுவான் துறையிலிருந்து விசேட படகுகள் மூலம் சகல தீவுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டன.

இன்றைய தினம் வாக்களிப்பு நிறைவு பெற்றதும், நெடுந்தீவு தவிர ஏனைய தீவுக ளில் இருந்து வாக்கு பெட்டிகள் விசேட படகுகள் மூலம் யாழ். மத்திய கல்லூரிக்கு எடுத்து வரப்படும்.

நெடுந்தீவின் வாக்குப் பெட்டிகள் ஹெலிகொப்டர் மூலமாக யாழ். மத்திய கல்லூரிக்கு கொண்டுவரப்படும். (ஐ)

## போலி இலக்க தகடுகளுடன் இரு வாகனங்கள் சிக்கின!

கண்டி, நவ. 14

கண்டியில் இரு வெவ்வேறு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் போலி இலக்கத் தகடுகளுடன் இரண்டு வாகனங்கள் கைப்பற்றப்பட்டன என்று கண்டி பொலிஸ் குற்ற புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, கண்டி - அஸ்கிரிய பிரதேசத் தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் போலி இலக்கத்தகடு பொருத்தப்பட்ட ஜீப் வாகனம் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.


இதனையடுத்து, இந்த ஜீப் வாகனத்தின் உரிமையாளர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கண்டி - கட்டுகெலே பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் போலி இலக்கத் தகடு பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் வெளிநாட்டில் உள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கண்டி பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். வாகனம் தொந்தரவு தரும். உடல் அசதி சோர்வு வந்து விலகும். ஆதாயம் தரும் நாள்.

**இடபம்**

திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பழைய கடனைத் தீர்க்க உதவிகள் கிடைக்கும். திடீரென்று அறிமுகமாகுபவரால் பயனடைவீர்கள்.

**மிதுனம்**

உணர்ச்சிப் பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாக பேசுவீர்கள் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். உறவினர் நண்பர்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்துக் கொள்வீர்கள்.

**கடகம்**

கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். செலவுகளை குறைக்க திட்டமிடுவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

**சிம்மம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் ஒருவரை மாற்றி ஒருவர் குறைக் கூறிக் கொண்டிருக்க வேண்டாம்.கவனம் தேவைப்படும் நாள்.

**கன்னி**

சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும்.

**துலாம்**

உற்சாகமாக இருப்பீர்கள். உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். அரசாங்க விஷயம் நல்ல விதத்தில் முடியும். சுப நிகழ்ச்சி கலந்து கொள்வீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும்.

**விருட்சிகம்**

குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள். பிரார்த்தனைகளை குடும்பத்தினருடன் நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு**

பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. மகளுக்கு நல்ல வரன் அமையும். பழைய கடனைத் தீர்க்க புது வழி பிறக்கும். முன்னேறும் நாள்.

**மகரம்**

குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். சொத்துப் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**

கணவன்-மனைவிக்குள் இருந்த மனகசப்புகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை உருவாகும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். நன்மை நடக்கும் நாள்.

**மீனம்**


ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் மேற் பார்வையிலேயே முடிப்பது நல்லது. உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும்.

# வன்னித் தேர்தல் மாவட்டத்தில் வாக்களிப்பு ஏற்பாடுகள் தயார்!

வவுனியா, நவ. 14

வன்னித் தேர்தல் மாவட்டத்தின் 387 வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்குப்பெட்டிகள் மற்றும் வாக்குச்சீட்டுகள் பொலிஸாரின் பாதுகாப்புடன் நேற்று அனுப்பி வைக்கப்பட்டன என்று வவுனியா மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் பி.எ. சரத் சந்திர தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு அவர் கருத்து வெளியிடுகை யில்,எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் 387 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வவுனியாவில் 152, முல்லைத்தீ வில் 137, மன்னாரில் 98 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த நிலையங்களுக்கு தேவையான வாக்குப்பெட்டிகள், வாக்குச் சீட்டுகள், ஏனைய ஆவணங்கள் அந்தந்த மாவட்டங்களில் அமைக்கப் பட்டுள்ள மத்திய நிலையங்க ளில் இருந்து நேற்று அனுப்பி வைக்கப்பட்டன.



பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 3 இலட்சத்து 6 ஆயிரத்து 81 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர். வவுனியாவில் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 585 பேரும் முல்லைத் தீவில் 86 ஆயிரத்து 889 பேரும் மன்னாரில் 90 ஆயிரத்து 607 பேரும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். மத்திய மகா வித்தியாலயம் ஆகியவை வாக்கெணணும் மத்திய நிலையங்களாக செயல்படவுள்ளன - என்றார். (ஐ)

# யாழ். தமிழ்ச் சங்கத்தினர் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 14

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனை யாழ்ப்பாண தமிழ் சங்கத்தினர் நேற்று புதன் கிழமை காலை நல்லெண்ண அடிப்படையில் சந்தித்தனர்.

இதன்போது சங்கத்துக்கான நிரந்தர இடம் அமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பின்போது சங்க ஆட்சிக் குழு உறுப்பினர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய "திருக்குறள் உரைநூல்" ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.



தமிழ்ச் சங்க பெருந்தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், தலைவர் பேராசிரியர் தி. வேல்நம்பி, முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், செயலாளர் ச. லலீசன், விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (ஐ)

# சுன்னாகம் பொலிஸாரால் எமது உயிருக்கு அச்சுறுத்தல்

## மனித உரிமைகள் குழுவில் குடும்பம் ஒன்றுமுறைப்பாடு!

யாழ்ப்பாணம், நவ. 14

சுன்னாகம் பொலிஸாரால் தமது உயிர்களுக்கு அச்சுறுத்தல் உள்ளது என்றும் தமக்கு பாதுகாப்பு வழங்குமாறும் கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

கடந்த வாரம் சுன்னாகப் பொலிசாரால் குடும்பம் ஒன்று வீதியில் வைத்து அச்சுறுத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மக்கள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பம் தமக்கு குறித்த பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களால் உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளனர்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ் பிராந்திய இணைப்பாளர் கனகராஜும் இவ்வாறான முறைப்பாடு பதிவாகியுள்ளதாக உறுதிப் படுத்தியுள்ளார். (ஐ)

# சுயேச்சை வேட்பாளரின் தந்தை மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், நவ. 14

சுயேச்சை வேட்பாளர் ஒருவரின் தந்தைமீது தாக்குதல் நடதப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை - நெளுக்குளத்தில் நேற்று முன்தினம் நடந்த இந்தத் தாக்குதலில் காயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வேட்பாளரின் வீட்டுக்குள் நுழைந்த கும்பல் ஒன்று அங்கிருந்த வேட்பாளரின் தந்தையை இரும்பு கம்பியால் தாக்கியது. இதில், அவர் தலையில் காயமடைந்தார். அத்துடன், வீட்டின் யன்னல் கண்ணாடிகளை வாகனத்தின் கண்ணாடிகளையும் அந்தக் கும்பல் அடித்து நொருக்கியுள்ளது.

அயல் வீட்டின் மீதும் தாக்குதலை நடத்தி விட்டு தப்பி சென்றதுள்ளது.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-05)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாடசாலை தவணைப் பரீட்சை வினாத்தாளில் அரசியல் கட்சியுடன் தொடர்புள்ள வினாக்கள்!

## விசாரணை நடத்த கல்வி அமைச்சு பணிப்புரை

கொழும்பு, நவ. 14

**பாடசாலை தவணைப் பரீட்சை வினாத்தாளில் அரசியல் கட்சியொன்றுடன் தொடர்புடைய 05 வினாக்கள் உள்ளடக்கப்பட்டமை தொடர்பில் விரைவில் விசாரணை நடத்துமாறு கல்வி அமைச்சின் செயலாளர் துறைசார் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.**

களுத்துறை மாவட்டத்திலுள்ள பாடசாலையொன்றில் இரண்டாம் தவணைப் பரீட்சையின்போது உயர்தர மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பொது அறிவு வினாத்தாளில் அரசியல் கட்சியொன்றுடன் தொடர்புடைய 05 வினாக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த வினாத்தாள் அதே பாடசாலையில் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு கூறியுள்ளது. (அ)

# மென்டிஸ் நிறுவன பணிப்பாளரின் பிணைக் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, நவ. 14

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள மென்டிஸ் நிறுவனத்தின் பணிப்பாளரான ரன்தேவ் தினேந்திர ஜோன் முன்வைத்த பிணைக் கோரிக்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த பிணை கோரிக்கையானது சோபித ராஜகருணா மற்றும் மஹேன் கொபல்லாவ ஆகிய மேன்முறையீட்டு நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3.5 பில்லியன் ரூபா பெறுமதி சேர் வரியை செலுத்தத் தவறியமை தொடர்பில் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் ரன்தேவ் தினேந்திர ஜோனுக்கு 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பிரதிவாதியின் பிணைக் கோரிக்கையை நிராகரித்த நீதிபதிகள் குழாம், விடயங்களை உறுதிப்படுத்துவதற்காக மனுவை எதிர்வரும் 29ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள திகதியிட்டது. (அ)

# இ. போ. சவின் சகல பஸ்களும் திங்கட்கிழமை வரை சேவையில்!

கொழும்பு, நவ. 14

அனைத்து இலங்கை போக்குவரத்துச் சபையின் டிப்போக்களுக்கும் நேற்று முன் தினம் முதல் எதிர்வரும் திங்கட்கிழமை வரை சகல பஸ்களையும் சேவையில் ஈடுப்படுத்துமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் ரமல் சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கு உள்ளேயும் வெளியேயும் பயணிப்போரின் போக்குவரத்தை இலகுபடுத்தும் வகையில், தற்போதைய நேர அட்டவணையின்படி பஸ்களை இயக்குமாறு அனைத்து மாகாண டிப்போக்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதன்படி, கம்பஹா, களுத்துறை மற்றும் கொழும்பு பிராந்தியங்களில் மேலதிகமாக 70 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அத்துடன், பயணிகளின் தேவையை பூர்த்தி செய்வதற்காக மேலும் 80 பஸ்கள் கொழும்பு கோட்டைக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த பஸ்கள் தற்போதுள்ள கால அட்டவணைக்கு மேலதிகமாக சேவையில் ஈடுப்படுத்தப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# தேர்தல்கால செயல்பாடுகள் குறித்து கண்காணிப்பாளர்கள் அவதானம்!

கொழும்பு, நவ. 14

தேர்தல் நடவடிக்கையின் போது வாக்காளர்களின் செயல்பாடுகள், தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் செயல்பாடுகள், தேர்தல் ஆணைக்குழுவின் செயல்பாடுகள் மற்றும் ஊடகங்களின் செயல்பாடுகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகள் தொடர்பிலும் சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களால் அவதானிக்கப்படும் என கேம்பிரிஜ் அமைப்பின் தலைவர் நாசிம் சைடி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் அழைப்பின்பேரில் ரஷ்யா, பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு, நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகளிலிருந்து 10 பேர் கொண்ட சர்வதேச தேர்தல் கண்காணிப்பு குழு இலங்கைக்கு வருகை தந்த நிலையில் கொழும்பு தாஜ் சமுத்ரா விடுதியில் ஊடக சந்திப்பொன்று நடைபெற்றது.

நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தல் நடவடிக்கைகள் இது வரையில் சிறப்பான முறையில் காணப்படுவதுடன் கடந்த ஜனாதிபதி தேர்தல் மிக அமைதியாக இடம்பெற்றதாக சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் தமது பணிகள் தொடர்பிலான விளக்கங்களையும் தேர்தல் நடைமுறை கண்காணிப்பு தொடர்பிலும் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக கேம்பிரிஜ் அமைப்பின் தலைவர் நாசிம் சைடி இதன்போது மேலதிக தகவல்களை வழங்கினார். (ஐ)

# தீவகப் பதிகளில் உள்ள வாக்காளர்கள் வாக்களிக்க போக்குவரத்து ஒழுங்குகள்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ். தீவகப் பதிகளிலுள்ள வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு ஆகிய தீவுப்பகுதிகளுக்கு பயணிப்பதற்கான விசேட படகுப் போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட பதில் அரச அதிபர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க குறிகாட்டுவான் துறைமுகத்திலிருந்து காலை 8 மணிக்கு வடதாரகை படகும், காலை 8.15 மணிக்கு சமுத்திரதேவா படகும், முற்பகல் 11.30 மணிக்கு குமுதினி படகும், மதியம் 1 மணிக்கு கரிகணன் படகும் பிற்பகல் 2.30 மணிக்கு குமுதினி படகும் மாலை 4 மணிக்கு சமுத்திரதேவா படகும் மாலை 5.30 மணிக்கு வடதாரகை படகும் சேவையிலீடுபடவுள்ளன.

அதேபோன்று நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து காலை 6.45 மணிக்கு வடதாரகை படகும் காலை 7 மணிக்கு சமுத்திரதேவா படகும் காலை 10.30 மணிக்கு குமுதினி படகும் முற்பகல் 11.30 மணிக்கு கரிகணன் படகும் மதியம் 1 மணிக்கு குமுதினி படகும் பிற்பகல் 3 மணிக்கு சமுத்திரதேவாபடகும் மாலை 4.30 மணிக்கு வடதாரகை படகும் சேவையிலீடுபடவுள்ளன என அவர் கூறினார். (அ)

# நடிகை ஹன்சமாலிக்கு எதிரான விசாரணையை துரிதப்படுத்துக!

கொழும்பு, நவ. 14

நடிகை பியூமி ஹன்சமாலி மற்றும் பிரபல வர்த்தகர் விரஞ்சித் தம்புகல ஆகியோருக்கு எதிரான வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதிவான் பண்டார இளங்கசிங்க உத்தரவிட்டுள்ளார்.

பியூமி ஹன்சமாலி மற்றும் விரஞ்சித் தம்புகல ஆகியோரின் சொத்துக்கள் தொடர்பில், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தது.

இந்த வழக்கு, நேற்று முன் தினம் மீள பரிசீலிக்கப்பட்ட போது, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சட்டவிரோதமாக சொத்துக்களைச் சம்பாதித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக பியூமி ஹன்சமாலி மற்றும் விரஞ்சித் தம்புகல ஆகியோர் தொடர்பில், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ)

*8 பில்லியன் ரூபாய் வரி நிலுவை:*

# உரிமங்களை இழக்கவுள்ள மது உற்பத்தி நிறுவனங்கள்

கொழும்பு, நவ. 14

டபிள்யூ. எம். மெண்டிஸ் அண்ட் கோ லிமிடெட் உள்ளிட்ட ஐந்து முன்னணி மதுபான உற்பத்தி நிறுவனங்கள், தமது மதுபான உற்பத்தி உரிமங்களை இழக்கும் அபாயத்தை எதிர்கொள்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

2024 நவம்பர் 30 ஆம் திகதிக்குள், குறித்த நிறுவனங்களின் 8.5 பில்லியன் திரட்டப்பட்ட வரி நிலுவைத் தொகை தீர்க்கப்படாவிட்டால் இந்த ஆபத்தை குறித்த நிறுவனங்கள் எதிர்கொள்ளக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொகையில் மெண்டிஸ் நிறுவனமே ஆகக்கூடிய 5.5 பில்லியன் ரூபாய் வரியை செலுத்த வேண்டியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

திறைசேரியின் அறிவுறுத்தல்களைத் தொடர்ந்து மதுவரித்திணைக்களம், இந்த மாத ஆரம்பத்தில், புதிய எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

அதில், நாட்டில் ஐந்து பெரிய அளவிலான மதுபானங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், இந்த மாத இறுதியில் தங்கள் வரி நிலுவைத் தொகையை தீர்க்கவேண்டும் என்று நினைவூட்டப்பட்டுள்ளது.

களுத்துறையின் சினெர்ஜி டிஸ்டில்லரி, குருநாகலின் வயம்ப டிஸ்டில்லரி, பின்லாந்து டிஸ்டில்லரீஸ், ஹிங்குரான டிஸ்டில்லரீஸ் லிமிடெட் மற்றும் டபிள்யூ. எம். மெண்டிஸ் அண்ட் கோ என்பனவே இந்த நிறுவனங்களாகும்.

முன்னதாக ஆறாவது உற்பத்தியாளரான ரன்தெனிகல டிஸ்டில்லரி லங்கா (பிரைவேட்) லிமிடெட் அண்மையில் மதுவரித்திணைக்களத்துக்கு தமது நிலுவைத் தொகையை செலுத்தியுள்ளது. (அ)

# நண்பர்கள் தகராறு; ஒருவர் படுகொலை

கொழும்பு, நவ. 14

அனுராதபுரம் விஜேபுர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இரு நண்பர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் ஒருவர் மண்வெட்டியால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக, அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம், கட்டுனேரிய பிரதேசத்தை சேர்ந்த 42 வயதான நபர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் தனது நண்பர்களுடன் இணைந்து, தனது வீட்டில் களியாட்ட நிகழ்வொன்றை ஏற்பாடு செய்தார்.

இதன்போது, உயிரிழந்த நபருக்கும், அவரது நண்பருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

அதனையடுத்து 28 வயதான நண்பர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# ஆட்பதிவு திணைக்களத்தின் சேவை இன்று நடைபெறாது

கொழும்பு, நவ. 14

பொதுத் தேர்தலில் திணைக்கள உத்தியோகஸ்த்தர்கள் ஈடுபடவிருப்பதால் தேசிய அடையாள அட்டை ஒருநாள் விநியோக சேவை உட்பட பொதுமக்களுக்கான எவ்வித சேவைகளும் இன்று வியாழக்கிழமை வழங்கப்படமாட்டாது என ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஆட்பதிவு திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில், பொதுத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு வியாழக்கிழமை நடைபெறவுள்ள நிலையில் திணைக்கள உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ளனர். ஆகவே, தேசிய அடையாள அட்டை உட்பட பொதுமக்களுக்கான எவ்வித சேவைகளும் இன்று வழங்கப்படமாட்டாது.

தேசிய அடையாள அட்டை உட்பட இதர சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக இன்று திணைக்களத்துக்கு வருகை தருவதை பொதுமக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் - என்று கேட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய வங்கி ஆளுநர், நிதி அமைச்சின் செயலாளர் பதவிகள் மாற்றம் இல்லை!

## கூறுகிறார் ஜனாதிபதி அநுரகுமார

கொழும்பு, நவ. 14

**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோர் மீதான விமர்சனங்களில் மாற்றமில்லை என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

தனிப்பட்ட ரீதியில் இந்த இருவர் மீது குரோதங்கள் எதுவும் கிடையாது என அவர் குறிப்பிட்டார்.

நிதிக் கொள்கைகள் தொடர்பில் அவர்கள் மீது அன்று முன்னெடுக்கப்பட்ட விமர்சனங்களில் மாற்றமில்லை என அவர் தெரிவித்தாளார்.

இந்த இரண்டு பதவிகளையும் அவசரமாக மாற்றுவது நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வந்த பொருளாதார நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதனால் பதவி மாற்றம் செய்யவில்லை என அவர் கூறினார்.

நாட்டின் பொருளாதாரம் சிக்கல் மிகுந்த பாதையில் பயணிப்பதாகவும் இதனால் அதற்கு தலைமை தாங்கிய பிரதான அதிகாரிகளுடன் பயணிப்பதே



பொருத்தமானதாக அமையும் எனவும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடு மற்றும் மக்களின் சார்பில் எடுக்கப்பட்ட சரியான தீர்மானமாக இதனைக் கருதுவதாக அவர் மேலும் கூறினார்.

தொலைக்காட்சி சேவையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். (அ)

# தேர்தலில் வாக்களிக்கும்போது புள்ளடி மட்டும் பயன்படுத்துக!

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தல்

கொழும்பு, நவ.14

நாடு முழுவதும் இன்று இடம்பெறும் பொதுத் தேர்தலில் வாக்களிக்கும்போது, புள்ளடியை மாத்திரம் பயன்படுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும்போது 1,2,3 என இலக்கங்கள் அல்லது புள்ளடி பயன்படுத்தப்பட்டன.

இதனால் பலரும் குழப்பத்துக்கு உள்ளாகியிருந்தனர்.

எவ்வாறாயினும், இன்றைய தினம் இடம்பெறும் பொதுத் தேர்தலில் வாக்களிக்கும்போதும், விருப்பு வாக்குகளை வழங்கும்போதும் புள்ளடியை மாத்திரமே பயன்படுத்தவேண்டும்.

எனவே உரிய முறையை பின்



பற்றி அளிக்கும் வாக்கை செல்லுபடியாகும் வாக்காக வாக்காளர்கள் மாற்ற வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு வின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார். (அ)

# வெளிநாட்டவர் கைது!

கொழும்பு, நவ. 14

போதைப்பொருளை உடலுக்குள் மறைத்து கொண்டு வந்த வெளிநாட்டு பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

சியரா லியோன் நாட்டை சேர்ந்த பயணி ஒருவர் விமான நிலைய போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

32 வயதுடைய சந்தேக நபர் சியரா லியோனின் பிரஜை என்பதுடன், துருக்கி ஏயார்லைன்ஸ் விமானத்தில் நேற்று முன் தினம் காலை இஸ்தான்புல் ஊடாக இலங்கை வந்தடைந்தார்.

ஸ்கானர் மூலம் பயணியை சோதனை செய்த அதிகாரிகள், அவரது உடலில் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை கண்டுபிடித்ததாக தகவல் வெளியானது.

சந்தேகநபர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவரது உடலில் இருந்து கொக்கெய்ன் எனச் சந்தேகிக்கப்படும் 17 மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

தனது வயிற்றில் அதிகமான போதைப்பொருள் மாத்திரைகள் இருப்பதாக சந்தேக நபர் வாக்குமூலம் அளித்துள்ளார். (அ)

# 15 மோசடி, ஊழல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை!

கொழும்பு, நவ. 14

கடந்த காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் 15 மோசடி மற்றும் ஊழல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக 3,040 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அதன் தலைவர் கோசல விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறப்புப் பிரவுக்கு 3,040 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அன்றாட தீர்வுகளை வழங்கக்கூடிய 1,124 முறைப்பாடுகள் உள்ளன.

மேலும், உள்ளக கணக்காய்வு செயல்முறையின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சிறப்பு மோசடி அல்லது ஊழல் நடந்ததா என்பதை கண்டறிய 15 சிறப்பு விசாரணைகளை நாங்கள் தேர்ந்தெடுத்துள்ளோம்.

அவற்றில் 3 தற்போது முறையான உள்ளக தணிக்கைக்கு உட்பட்டுள்ளன.

இன்னும் சில வெளியில் ஊடகங்களில் விவாதிக்கப்பட்டன. அதற்கான தகவல்களை எடுத்து வருகிறோம்-என்றார். (அ)

# ரோஹித அபேகுணவர்தனவின் மருமகனைத் தேடி வலை வீச்சு!

கொழும்பு, நவ. 14

சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு இங்கு பொருத்தப்பட்டு செய்யப்பட்டு, இயந்திர எண் இல்லாத மிட்சுபிஷி வகை ஜீப் பயன்படுத்தியமை தொடர்பில் முன்னாள் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் மருமகன் எனக் கூறப்படும் கார் விற்பனையாளர் ஒருவரை கைது செய்வதற்கான விசாரணைகளை கண்டி குற்றப்புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

இசுரு சேரம் என்ற சந்தேக நபரின் சகோதரன் முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் மகளைத் திருமணம் செய்துள்ள நிலையில், இது தொடர்பான உண்மைகளை கண்டி நீதிமன்றில் தெரிவித்து அவருக்கு எதிராக பயணத்தடையை பெற்றுக்கொள்ள பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சந்தேக நபரை கைது செய்வதற்காக ஆனிவத்தையில் உள்ள அவரது வீட்டுக்கு பல தடவைகள் சென்றதாகவும், ஆனால் அவர் வீட்டில் இல்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவரது வீட்டில் இருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட இரண்டு வாகனங்கள் தொடர்பான நிபுணர் அறிக்கைகளைப் பெற்ற பின்னர், குறித்த கார் உதிரிப்பாகங்களுடன் இணைக்கப்பட்டது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஜீப் வண்டியின் சேஸ் எண் அழிக்கப்பட்டுள்ளதால், இது அரசுக்கு சொந்தமானதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இரண்டு வாகனங்களும் ரூ.60 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புடையவை.

கண்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த பண்டாரநாயக்கவின் பணிப்புரையின் பேரில் கண்டி பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் திலக் சமரநாயக்க உள்ளிட்ட குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# சமூக ஊடகங்கள் மூலம் தேர்தல் சட்ட மீறல்கள்!

## 490 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, நவ. 14

ஒக்ரோபர் 11 முதல் நவம்பர் 11 வரையிலான காலத்திற்குள் சமூக ஊடகங்கள் வழியிலான தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான மொத்தம் 490 முறைப்பாடுகள் தேசிய தேர்தல் ஆணைக் குழுவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன.

குறித்த பதிவுகள் பற்றி தகவல்கள் அறிவிக்கப்பட்டவுடன் உரிய சமூக ஊடக நிறுவனங்கள் அவ்வாறான 184 முறைப்பாடுகளின் இணைப்புகள் மற்றும் உள்ளடக்கங்களை நீக்கியதாக தேர்தல் ஆணைக்குழு ஒரு அறிக்கையை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

இருப்பினும், 87 முறைப்பாடுகள் தொடர்பான இணைப்புகள் அல்லது உள்ளடக்கத்தை அகற்ற சமூக ஊடக நிறுவனங்கள் மறுத்துள்ளன.

219 முறைப்பாடுகள் தொடர்பான உள்ளடக்கத்தை சமூக ஊடக நிறுவனங்கள் இன்னும் மதிப்பாய்வு செய்யவில்லை என்று தேர்தல் ஆணைக்கழு தெரிவித்துள்ளது.

வெறுப்புப் பேச்சு, இனம் மற்றும் மதத்திற்கு எதிரான அவதூறு அறிக்கைகள், தேர்தல் பிரச்சாரத்திற்கு குழந்தைகளைப் பயன்படுத்துதல் மற்றும் தவறான அல்லது போலியான தகவல் பரிமாற்றம் தொடர்பான பதிவுகள் மீது முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (அ)

# வெடிபொருட்களுடன் ஒருவர் கைதானார்!

கொழும்பு, நவ. 14

சட்டவிரோதமான முறையில் வெடிபொருட்களை வைத்திருந்த நபர் ஒருவர் பண்டாரகம பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

குங்கமுவ பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடம் இருந்து 4 வோட்டர் ஜெல் குச்சிகள், 890 கிராம் துப்பாக்கி மருந்து, 21 கிலோவுக்கும் அதிகளவான அம்மோனியம் நைட்ரேட், 56 டெட்டனேட்டர், 250 மீற்றர் நூல் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டன.

பண்டாரகம குங்கமுவ பகுதியைச் சேர்ந்த 57 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். (அ)

# நகைக்கடையில் கொள்ளையிட்டவருக்கு ஆயுள் தண்டனை!

கொழும்பு, நவ. 14

நகைக்கடையில் கொள்ளையடித்து, அதன் ஊழியர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தது.

தண்டனையுடன் சேர்த்து சம்பவத்தின்போது குற்றம் சாட்டப்பட்டவர் ... பாதிக்கப்பட்ட ஊழியருக்கு 200,000 ரூபாய் இழப்பீடு வழங்கவும் உத்தரவிடப்பட்டது.

நீண்ட வழக்கு விசாரணையின் பின்னர், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்க அரசு தரப்பால் முடிந்ததாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க அவதானித்தார்.

2004 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் திகதி நகைக்கடையில் கொள்ளையடித்து அதன் ஊழியரை துப்பாக்கியால் சுட்டதற்காக குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்திருந்தார். திருட்டுச் சம்பவத்தின்போது திருடப்பட்ட நகைகளின் மதிப்பு சுமார் ரூ.40,000 ஆகும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்முறை தேர்தலுக்கு அதிக பணம் செலவு!

## தேர்தல் ஆணைக்குழு

கொழும்பு, நவ. 14

**இம்முறை பாராளுமன்ற தேர்தலுக்கு அதிக எண்ணிக் கையிலான வேட்பாளர்கள் இருப்பதால், கூடுதல் வாக்கு எண்ணும் மையங்கள், ஆவணப் பணிகள், வாக்குச் சீட்டு அச்சிடுதல் போன்றவற்றில் கூடுதல் செலவுகள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் விளைவாக ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்துக்கும் ஏற்ப வாக்குச்சீட்டுகளில் பெரும் வேறுபாடுகள் உள்ளன.

கடந்த முறை 1713 ஆக இருந்த வாக்கு எண்ணும் மையங்களின் எண்ணிக்கை இம்முறை 2034 ஆக அதிகரித்துள்ளது.

இவை அனைத்தும் தேர்தல் அலுவலகத்துக்கு கூடுதல் செலவாகும். இருப்பினும், வாக்குப் பதிவைத் தொடர்ந்து சரியான மதிப்பீடுகள் செய்யப்பட்ட பின்னரே துல்லியமான செலவு உயர்வை அறிய முடியும் - என்றார். (அ)

# நிலந்த ஜயவர்த்தனவுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை ஆரம்பம்!

கொழும்பு, நவ. 14

ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவரது சட்டத்தரணி மேன்முறையீட்டு நீதிமன்றில் தெரிவித்தார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய, நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடக் கோரிய மனு நேற்று விசாரணைக்கு வந்தது.

அதன்போது, நிலந்த ஜயவர்தன சார்பில் முன்னிலை யான ஜனாதிபதி சட்டத்தரணி சந்தக ஜயசுந்தர நீதிமன்றில் இதனை அறிவித்தார்.

அதன்போது, மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி இந்த மனுவில் உள்ள விடயங்களை உறுதிப்படுத்துவதற்குத் திகதியொன்றை வழங்குமாறு நீதிமன்றிடம் கோரிக்கை விடுத்தார்.

அதன்போது, நிலந்த ஜயவர்தன சார்பில் முன்னிலையான சட்டத்தரணி உயர் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பிரகாரம், தமது சேவைபெறுநருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றுக்கு அறிவித்தார். (அ)

# இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 14

நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில் நேற்று அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 287 ரூபாய் 95 சதம், விற்பனை பெறுமதி 296 ரூபாய் 97 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 365 ரூபாய் 72 சதம், விற்பனை பெறுமதி 380 ரூபா 16 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 304 ரூபாய் 33 சதம், விற்பனை பெறுமதி 317 ரூபாய் 19 சதம்.

சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 323 ரூபாய் 80 சம், விற்பனை பெறுமதி 339 ரூபாய் 43 சதம்.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 205 ரூபா 14 சதம், விற்பனை பெறுமதி 214 ரூபாய் 11 சதம்.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 186 ரூபாய் 33 சதம், விற்பனை பெறுமதி 196 ரூபாய் 6 சதம்.

சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 213 ரூபாய் 49 சதம், விற்பனை பெறுமதி 223 ரூபாய் 70 சதம்.

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 1 ரூபாய் 85 சதம், விற்பனை பெறுமதி 1 ரூபாய் 92 சதம். (அ)

# நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை மாத்திரம் நிறைவேற்ற சுங்க தொழிற்சங்க கூட்டமைப்பு முடிவு

கொழும்பு, நவ. 14

நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை மாத்திரம் நிறைவேற்ற சுங்க தொழிற்சங்க கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது. சுங்க தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவர் அமில சஞ்ஜீவ இதனைத் தெரிவித்தார்.

கடந்த 7 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்திற்குக் கௌ விஜயம் மேற்கொண்டிருந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் விஜித ஹேரத்திடம் போலியான தகவல்களை சமர்ப்பித்தமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தங்களது பணியாளர்களைத் தவறாக சித்தரிக்கும் வகையிலான தகவல்கள் அண்மைய சில நாட்களாக உலாவுகின்றன. தங்களது பணிகளையும் மீறி சில சேவைகளில் சுங்கப் பணியாளர்கள் ஈடுபடுவதுண்டு.

அத்தகைய செயற்பாடுகளைத் தவறாக சித்தரிக்க சிலர் முயல்கின்றனர்.

இந்தநிலையில் தங்களது கடமைகளை மாத்திரம் மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளதாக சுங்க தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் அமில சஞ்ஜீவ தெரிவித்தார். (அ)

# வாக்களிப்பதற்கு சொந்த இடங்களுக்கு செல்வதற்கு புறக்கோட்டை பஸ் நிலையத்தில் காத்திருந்த மக்கள்!

கொழும்பு, நவ. 14

கொழும்பு, புறக்கோட்டை பிரதான பஸ் தரிப்பிடத்தில்பெரும்எண்ணிக்கையிலான பயணிகள் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்காக நேற்று காத்திருந்தனர்.

பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்காக தூர பிரதேசங்களுக்கு செல்லும் பயணிகளின் நலன் கருதி விசேட போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இருந்த போதிலும் கொழும்பு புறக்கோட்டையில் பெருந்திரளான பயணிகள், தமது சொந்த இடங்களுக்கு செல்வதற்காக காத்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

இதன் போது கருத்து தெரிவித்த மக்கள், ஒரு மணி நேரமாக காத்திருக்கின்றோம். இன்னமும் பஸ் இல்லை. ஆகவே வரிசையில் காத்திருக்கின் றோம். தேர்தலில் வாக்களிக்க செல்வதற்காகவே காத்திருக்கின் றோம் - என்றனர். (அ)

# வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்ட சொகுசு வாகனம் பொலிஸாரால் மீட்பு!

கொழும்பு, நவ. 14

தங்காலை - விதாரந்தெனிய பகுதியில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் மூன்றரை கோடி ரூபாய் பெறுமதியான சொகுசு வாகனம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இந்த வாகனம் சட்டவிரோதமாக ஒன்றுசேர்த்து தயாரிக்கப்பட்டு சட்டவிரோதமாக பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

குறித்த வாகனத்தின் தற்போதைய உரிமையாளர் எனக் கருதப்படும் எம்பிலிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் சட்டத்தரணி ஊடாக மாத்தறை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த பின்னர் கைதானார்.

களுத்துறை பகுதியைச் சேர்ந்த அரசியல் பிரமுகர் ஒருவரின் சகோதரர், எம்பிலிப்பிட்டிய பகுதியிலுள்ள வர்த்தகருக்கு இந்த வாகனத்தை விற்பனை செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந் துள்ளது. (அ)

# 350,000 இற்கும் மேற்பட்ட வாக்காளர் அட்டைகள் அஞ்சல் நிலையங்களில்!

கொழும்பு, நவ. 14

பொதுத் தேர்தலுக்கான 350,000ற்கும் அதிகமான வாக்காளர் அட்டைகள் தற்போது வரை அஞ்சல் நிலையங்களில் தேங்கியுள்ளதாகப் பிரதி அஞ்சல் மா அதிபர் ராஜித்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அஞ்சல் திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட வாக்காளர் அட்டைகளில் 98 சதவீதமா னவை தற்போது வீடுகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

எனவே இதுவரை வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாத வாக்காளர்கள் அஞ்சல் நிலையத்துக்கு சென்று அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என பிரதி அஞ்சல் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார். (அ)

# வாள்வெட்டு தாக்குதலுக்கு இலக்காகி மீனவர் மரணம்!

கொழும்பு, நவ. 14

காலி, ஹபராதுவ பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மிஹிரிபென்ன பிரதேசத்தில் உள்ள மீன்பிடி துறைமுகத்தில் வாள் வெட்டு தாக்குதலுக்கு இலக்காகி மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஹபராதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் காலி, மிஹிரிபென்ன பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய மீனவர் ஆவார்.

முன்விரோதம் காரணமாக மீன்பிடி துறைமுகத்திற்குச் சென்ற இனங்காணாத மூவரால் இந்த வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபராதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தேரரை மிரட்டி பணம் பறித்த இரண்டு இளைஞர்கள் கைது!

கொழும்பு, நவ. 14

பொலனறுவை, திம்புலாகல பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் பணிபுரியும் தேரர் ஒருவரை மிரட்டி 03 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் பணம் பறித்த இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலன்னறுவை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தெஹியத்தக்கண்டிய பிரதேசத்தில் வசிக்கும் 23 மற்றும் 29 வயதுடையவர்கள் ஆவர்.

சந்தேக நபர்கள் இருவரும் குறித்த விகாரைக்குச் சென்று அங்கு பணி புரிந்த தேரரை தாக்கி நிர்வாணமாக்கி அதனை காணொளிகளாக எடுத்து சமூக ஊடகங்களில் பதிவிடுவதாகக் கூறி தேரரை மிரட்டி சுமார் ஒரு வருட காலமாக பணம் பறித்து வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள், கையடக்கத் தொலைபேசி மற்றும் வங்கிக் கணக்கு புத்தகம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலனறுவை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாராளுமன்றத் தேர்தல் இன்று:

# மட்டக்களப்பு மாவட்டம் வாக்களிக்க தயார் நிலை!

மட்டக்களப்பு, நவ. 14

**பாராளுமன்றத் தேர்தல் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் வாக்களிக்க வசதியாக அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் திருமதி ஜே. ஜே. முரளிதரன் தெரிவித்தார்.**

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற உள்ள பொதுத் தேர்தலுக்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக மாவட்டத்தில் 6,750 அரச அதிகாரிகள் கடமையில் ஈடுபட உள்ளனர்.

மாவட்டத்தில் 442 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணும் நிலையமாக மட்டக்களப்பு இந்துக்கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 46 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் அட்டைகள் தேர்தல் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுவரை வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் தங்களது பகுதிகளில் உள்ள தபால் நிலையத்துக்கு சென்று அவற்றை பெற்றுக் கொள்ள முடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 218 தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. வன்முறை சம்பவங்கள் எதுவும் மாவட்டத்தில் பதிவாகவில்லை.

தேர்தலையொட்டி மாவட்டம் முழுவதும் முப்படையினருடன் 1,900 பொலிஸார், 87 விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 இலட்சத்து 49 ஆயிரத்து 686 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் மக்கள் சிரமதானம்!

திருக்கோவில், நவ. 14


அம்பாறை - கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

அம்பாறை மாவட்ட மாவீரர் பணிக்குழுவின் ஏற்பாட்டில் இந்த சிரமதானப் பணிகள் நடைபெற்றன.

பணிக்குழுவினர், மாவீரர்களின் குடும்பத்தினர், பொதுமக்களின் பங்களிப்பில் இந்தத் துயிலும் இல்லம் துப்புரவு செய்யப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரேயொரு மாவீரர் துயிலும் இல்லமாக கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லம் உள்ளது.

தமிழ் மக்களின் இன விடுதலைப் போரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் உயிர் நீத்த மாவீரர்களை நினைவுகூரும் மாவீரர் வாரம் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## கிழக்கு ஆளுநரை சந்தித்த தேர்தல் கண்காணிப்பாளர்

திருகோணமலை, நவ. 14

கிழக்கு ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகரவை சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர் லெவி சேவ் நிகோலே நேற்று சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது லெவிசேவ், சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர் என்ற வகையில் பல நாடுகளின் தேர்தல்களை அவதானித்துள்ளதாகவும், இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப தேர்தல் சட்டம் எந்தளவுக்கு பொருத்தமானது என்பதை அவதானிப்பதாகவும் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரை சந்தித்து தேர்தல் தொடர்பில் கலந்துரையாடியதுடன், பாராளுமன்ற தேர்தல் உத்தியோக பூர்வ வாக்குச்சீட்டு விநியோகத்தை அவதானித்ததுடன் தேர்தல் நிறைவடைந்த பின்னர் சர்வதேச பார்வையாளராக தேர்தல் தொடர்பான அவதானிப்பு அறிக்கைகளை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் - அவர் கூறினார். (ஐ)

## மட்டு. வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் சென்றடைந்தன!

மட்டக்களப்பு, நவ. 14

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகளை கொண்டு செல்லும் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

பாராளுமன்றத் தேர்தல் இன்று நடைபெறுகிறது. இதற்கான ஆயத்த நடவடிக்கைகள் நேற்று நடைபெற்றன.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள பிரதான தேர்தல் பணிமனையிலிருந்து நேற்று காலை முதல் வாக்கு பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான திருமதி ஜே. ஜே. முரளிதரன் தலைமையில் இந்த வாக்குப் பெட்டிகள் விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.



இந்த நடவடிக்கையில் 300இற்கும் அதிகமான வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.

இன்றைய தேர்தலில் வாக்களிப்பதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் 442 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 6 ஆயிரத்து 750 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

தபால் மூல வாக்குகளை எண்ணுவதற்காக 9 நிலையங்களும் ஏனைய வாக்குகளை எண்ணுவதற்காக 37 நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. (ஐ)

## திருகோணமலையும் வாக்களிப்பதற்கு தயார் நிலை!

திருகோணமலை, நவ. 14

திருகோணமலை மாவட்டத்தில் பாராளமன்ற தேர்தலை சுமுகமான முறையில் நடத்துவதற்கு சகல முறைபாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று தெரிவத்தாட்சி அலுவலர் சாமிந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

தேர்தலை அமைதியாக நடத்த மாவட்டத்தில் 1,667 பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 318 வாக்களிப்பு நிலையங்களுக்குமான வாக்குப்பெட்டிகள் கொண்டுசெல்லப்பட்டுள்ளன.



வாக்கெண்ணும் மத்திய நிலையமாக திருகோணமலை விபுலானந்த கல்லூரி செயல்படவுள்ளது. வாக்கெண்ணும் பணிக்காக 36 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 4,666 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

இதுவரை 63 தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன - என்றார்.

திருகோணமலை மாவட்டத்தில் 3 இலட்சத்து 15 ஆயிரத்து 925 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் - என்றும் குறிப்பிட்டார். (ஐ)

## தேர்தல் சுவரொட்டி ஒட்டிய இருவர் கைது

திருகோணமலை, நவ. 14

கிண்ணியாவில் சட்டவிரோதமாக தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிய சந்தேகநபர்கள் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கிண்ணியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் கிண்ணியா பிரதேசத்தில் உள்ள இரு கட்சி பணிமனைகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொதுத் தேர்தல் தொடர்பான பிரசார நடவடிக்கைகள் திங்கட்கிழமையுடன் நிறைவடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேசிய மக்கள் சக்திக்கு எதிரான காணொலி குறித்து முறைப்பாடு

காத்தான்குடி, நவ. 14

தேசிய மக்கள் சக்திக்கு எதிராக வெளியான காணொலி தொடர்பில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய, அந்தக் கட்சியின் வேட்பாளர் பிரதெளஸ் நளீமி ஆகியோருக்கு எதிராக இந்தக் காணொலி வெளியிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில், அந்தக் காணொலியை தயாரித்தவர்கள், சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியவர்கள், பகிர்ந்தவர்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸா பாதுகாப்பு வலயத்திலும் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்!

## 44 பொதுமக்கள் உயிரிழப்பு லெபனானில் 33 பேர் பலி!



காஸா, நவ. 14

**காஸா பாதுகாப்பு வலயத்தில் இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் 44 பேர் உயிரிழந்தனர். இதேபோன்று லெபனானில் நடத்தப்பட்ட விமான தாக்குதல்களில் 33 பேர் பலியாகினர்.**

நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களிலேயே இந்த உயிரிழப்புகள் இடம்பெற்றன.

காசாவுக்குள் அதிக மனிதாபிமான உதவிகளை அனுமதிப்பதற்கான காலக்கெடு முடிந்த பிறகு, இஸ்ரேலுக்கான இராணுவ ஆதரவைக் குறைக்கப் போவதில்லை என்று அமெரிக்கா கூறியிருந்தது. இந்த நிலையில் இஸ்ரேல் வான் தாக்குதலை நடத்தியுள்ளது.

லெபனானில் ஹிஸ்புல்லா நடமாட்டம் அதிகமாகக் காணப்பட்ட தஹியே என்ற பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலிலேயே 33 பேர் கொல்லப்பட்டனர்.

ஹிஸ்புல்லாவின் கட்டமைப்பு, கட்டளையிடும் மையம், ஆயுதங்கள் தயாரிக்கும் இடம் ஆகியவற்றை குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. (ஐ)



# பெண்ணின் திருமண வயதை 9ஆகக் குறைக்கிறது ஈராக்!

## மனித உரிமைகள் அமைப்புகள் எதிர்ப்பு

பாக்தாத், நவ. 14

ஈராக் பாராளுமன்றம் பெண்ணின் திருமண வயதை 18இலிருந்து 9ஆகக் குறைத்து சட்டம் இயற்ற நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த முடிவுக்கு பெண், மனித உரிமைகள் சார் அமைப்புகள் கடும் எதிர்ப்புகளை தெரிவித்து வருகின்றனர்.

மேற்காசிய நாடான ஈராக்கில் ஷியா முஸ்லிம்கள் அதிகளவில் வசிக்கின்றனர். இவர்கள் பழமைவாதத்தை கடைப்பிடிக்கின்றனர். எனினும், அந்த நாட்டில் பெண்களின் திருமண வயது 18ஆக உள்ளது. 1950ஆம் ஆண்டிலிருந்து சிறுவர் திருமணம் தடை செய்யப்பட்டிருந்தாலும் 28வீதமான பெண்கள் 18 வயதுக்கு முன்பாகவே திருமணம் செய்கின்றனர் என்று ஐ. நா. ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே, பெண்ணின் திருமண வயதை 18இல் இருந்து 9ஆகக் குறைத்து சட்டமியற்ற அந்த நாட்டு அரசாங்கம் பிரேரணை கொண்டு வந்துள்ளது.

ஷியா முஸ்லிம் தரப்பிலிருந்து எதிர்ப்புகள் கிளம்பாத போதிலும் பெண்கள் உரிமைகள், மனித உரிமைகள் அமைப்புகள் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. (ஐ)

# பிட்கொயினின் மதிப்பு 89,637 டொலராக உயர்வு

வாஷிங்டன், நவ. 14

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் வெற்றி பெற்றதையடுத்து ஒரு பிட்கொயினின் மதிப்பு 89 ஆயிரத்து 637 டொலராக (நம் நாட்டு மதிப்பில் சுமார் 2 கோடியே 61இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய்) இலட்சத்து உயர்ந்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் முன்னிலை பெறத் தொடங்கியதுமே எண்ணிம நாணயம் (கிரிப்டோ கரன்சி) எனப்படும் பிட்கொயினின் மதிப்பு அதிகரிக்கத் தொடங்கியது.

கமலா ஹாரிஸிலும் பார்க்க ட்ரம்ப் எண்ணிம நாணயத்துக்கு ஆதவான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்ற நம்பிக்கையே இதற்குக் காரணமாகும்.

தேர்தல் முடிவுகள் வெளியானபோது பிட்கொயினின் மதிப்பு 75 ஆயிரம் டொலர்களாக இருந்தது. இந்த நிலையில் ட்ரம்ப் வெற்றி பெற்ற பின்னர் பிட்கொயினின் மதிப்பு 89 ஆயிரத்து 637 என்று உச்சத்தைத் தொட்டுள்ளது.

ட்ரம்ப் அமெரிக்காவை கிரிப்டோ தலைநகராக மாற்றப் போவதாகவும், செக்யூரிட்டிஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் குழுவின் தலைவரான கேரி ஜென்ஸ்லரை மாற்றுவதாகவும் டிரம்ப் பிரசாரத்தின்போது வாக்குறுதி அளித்திருந்ததை குறிப்பிடத்தக்கது.

எண்ணிம நாணயம் என்பது பாதுகாக்கப்பட்ட டிஜிற்றல் நாணயமாகும். இது பெரும்பாலும் ஒழுங்குபடுத்தப்படாத மற்றும் அதன் டெவலப்பர்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. யாருடைய கட்டுப்பாட்டிலும் இயங்காத இந்த பரிவர்த்தனையை ஏற்க எல்லா நாடுகளுமே தயக்கம் காட்டுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# செயல்திறன் துறையை எலான், விவேக் வழிநடத்துவர்!

## டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பு



புளோரிடா, நவ. 14

தொழிலதிபர்கள் எலான் மஸ்க் மற்றும் விவேக் ராமசாமி ஆகியோர் செயல்திறன் துறையை தலைமை தாங்கி வழிநடத்துவர் என அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்வாகி உள்ள டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு உலக அளவில் கவனம் பெற்றுள்ளது.

"மகத்தான எலான் மஸ்க்கும் அமெரிக்க நாட்டின்மீது பற்று கொண்ட விவேக் ராமசாமியும் கூட்டாக இணைந்து அரசாங்கத்தின் செயல்திறன் துறையை தலைமை தாங்கி வழிநடத்துவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

இந்த இரண்டு அமெரிக்கர்களும் இணைந்து எனது ஆட்சி நிர்வாகத்தில் அதிகப்படியான விதிமுறைகளை தளர்த்துவது, தேவையற்ற செலவுகளை குறைப்பது, அரசு நிறுவனங்களை மறுகட்டமைப்பது போன்ற பணிகளில் கவனம் செலுத்துவார்கள். இது அமெரிக்காவை பாதுகாப்பதற்கு மிகவும் அவசியம். இது நிச்சயம் அரச நிதியை வீணடிப்பவர்களுக்கு அதிர்வலைகளை தரும். ஜூலை 4, 2026 வரை அவர்கள் இந்த பொறுப்பில் தொடர்வார்கள்" என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

செயல்திறன் துறையானது அரசாங்கத்துக்கு வெளியில் இருந்து ஆலோசனை, வழிகாட்டுதலை வழங்கும். இதேபோல பெரிய அளவிலான கட்டமைப்பு சீர்திருத்தங்களை முன்னெடுக்க தொழில் முனைவோர் அணுகுமுறையை உருவாக்கும் என்றும், வெள்ளை மாளிகை, மேலாண்மை அலுவலகம் மற்றும் வரவு - செலவு திட்டம் போன்ற விவகாரங்களில் இந்த துறை பங்கு கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ட்ரம்ப் எதிர்வரும் ஜனவரி 20ஆம் திகதி ஜனாதிபதியாக பொறுப்பேற்பார். (ஐ)

விவாகரத்து வழக்கு தீர்ப்பில் அதிருப்தி:

# கோபமடைந்த நபர் செலுத்திய காரில் சிக்கி 35 பேர் உயிரிழப்பு

பீஜிங், நவ. 14

விவகாரத்து வழக்கில் சொத்து பங்கீட்டில் ஏற்பட்ட அதிருப்தியடைந்தவர் தனது காரை மைதானத்தில் உடற்பயிற்செய்து கொண்டிருந்தவர்களுக்கு மத்தியில் செலுத்தியதில் 35 பேர் உயிரிழந்தனர். 43 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

சீனாவின் ஜூஹாய் நகரில் இந்தச் சம்பவம் திங்கட்கிழமை இரவு 7.45 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காரை ஓட்டிச் சென்ற முதியவர் ஃபென் என்று அடையாளம் காணப்பட்டார்.

விவகாரத்து தீர்ப்பால் சொத்து பங்கீட்டால் அதிருப்தி அடைந்த அவர் தனது காரை நகரத்தின் விளையாட்டு மைதானத்துக்குள் வேகமாக செலுத்திச் சென்றுள்ளார். இதன்போது, அங்கு உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த சிறுவர்கள், பெரியவர்கள் என 35 பேர் உயிரிழந்தனர். 43 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

விடயம் அறிந்து அங்கு வந்த பொலிஸார் காரை செலுத்திய முதியவரை கைது செய்தனர். முதியவர் அப்போது மயங்கிய நிலையில் காணப்பட்டார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் கோமா நிலையில் உள்ளார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கார் விபத்தில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வலியுறுத்தினார். மேலும், குற்றவாளி சட்டத்தின் படி தண்டிக்கப்பட வேண்டும் என்றார். (ஐ)

# ஹிஸ்புல்லாக்கள் மீதான தாக்குதல்கள் தொடரும்!

## இஸ்ரேல் அறிவிப்பு

டெல்அவிவ், நவ. 14

லெபனானின் ஹிஸ்புல்லா போராளிகள்மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படும் என்று இஸ்ரேல் பாதுகாப்பு துறை அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் இராணுவத்துக்கும் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பினருக்கும் இடையே போர் நடைபெற்று வருகிறது. இதில், இரு தரப்பிலும் பலர் உயிரிழந்தனர். இந்த நிலையில், இரு தரப்பும் போர் நிறுத்தம் செய்துள்ளன என்று தகவல்கள் வெளியாகின.

இது தொடர்பில், இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் கருத்து வெளியிடுகையில்,

"போர் நிறுத்தம் தொடர்பாக ஹிஸ்புல்லா தீவிரவாதிகளுடன் அதிகாரபூர்வமாக பேச்சு நடத்தப்படவில்லை. இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த மாட்டோம் ஆயுதங்களை கடத்த மாட்டோம் என்று ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் உறுதி அளிக்க வேண்டும். வாக்குறுதி அளித்தால் மட்டும் போதாது. அந்த வாக்குறுதியை காப்பாற்ற வேண்டும். அதுவரை அவர்களுடன் பேச்சு நடத்தப்படாது. ஹிஸ்புல்லா தீவிரவாதிகள்மீது தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தப்படும். எங்களின் முழு பலத்தோடு தாக்குதலை தொடருவோம். ஈரான் அரசுக்கு இஸ்ரேல் இராணுவத்தின் வலிமையை புரிய வைத்துள்ளோம். ஈரானின் அணு ஆயுத திட்டங்களை தகர்க்க இஸ்ரேல் உறுதி பூண்டிருக்கிறது - என்றார்.

ஹிஸ்புல்லாவின் ஊடக பிரிவு தலைவர் முகமது ஆபிப் கூறும்போது, "போர் நிறுத்தம் தொடர்பாக இஸ்ரேலுடன் எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை. எனினும், இரு தரப்புக்கும் இடையே மூன்றாம் தரப்பு மூலம் பேச்சுகள் நடைபெற்று வருகின்றன" என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரந்த கூட்டாட்சி குறித்து அரசாங்கம் பரிசீலிக்க வேண்டியது அவசியம்



கலாநிதி ஜெகான் பெரேரா

பொருளாதார நெருக்கடி மீண்டும் ஏற்டக்கூடிய சாத்தியத்துக்கு மத்தியில் இலங்கை கடுமையாக பதிக்கப்படக் கூடிய நிலையிலேயே தொடர்ந்தும் இருக்கிறது என்பது எல்லோரையும் போன்று அரசாங்கத்துக்கும் தெரியும். கத்தி முனையில் நாடு இருக்கிறது என்று சர்வதேச நாணய நிதியம் கூறியிருக்கும் நிலையில் தேசிய நிபுணர்களும் சர்வதேச நிபுணர்களும் இதை சுட்டிக்காட்டியிருக் கிறார்கள்.

இத்தகைய ஒரு நிலைவரத்தின் ஊடாக நாட்டைக் கொண்டு செல்வதில் அரசாஙகம் மிகவும் கவனமாக எடுத்த நடவடிக்கைகளில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவித் திட்டத்தை ஏற்றுக் கொண்ட அதன் செயலும் அடங்கும். அந்த உதவித் திட்டத்தை பிரதான எதிர்க்கட்சி எதிர்த்தபோதிலும், முன் னைய அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி அதைப் பெற்றுக்கொண் டது. அதை தனியொரு பெரிய வெற்றியாக வும் அந்த அரசாங்கம் கருதியது. முன்னைய அரசாங்கத்தைப் போன்று பாரிய விரய செலவினங்களுக்கு வழிவ குக்கக்கூடிய தன்னல நடவடிக் கைகளில் இன்றைய அரசாங்கம் ஈடுபட வில்லை.





தேர்தல் நோக் கங்களுக்காக அரச வளங்களை துஷ்பிர யோகம் செய்யா மல் இருந்ததன் மூலமாக பெரிதும் மெச்தக்க ஒழுங்கு முறையும் கட்டுப் பாட்டை யும் அரசாங்கம் வெளிக்காட் டியிருக் கிறது. இது சட்டத்துக்கு மேலா னவர் களாக தங்களைக் கருதிச் செயற் பட்ட முன்னைய தலைவர்களைப் போலன்றி சட்டத்திற்கு உட்பட்ட ஆட் சியை நடத் துவதில் கடப்பாடு கொண் டவர்களாக இன்றைய அரசாங்க தலை வர்கள் நடந்து கொள்வதை காட்டுகிறது.

நாட்டின் முன்னணி தேர்தல் கண் காணிப்பு அமைப்புக்கள் இதைச் சுட்டிக் காட்டியிருக்கின்றன. அண்மையில் முடி வடைந்த ஜனாதிபதி தேர்தல் உட்பட முன்னைய தேர்தல்களில் அரசாங்கங் கள் அரச வளங்களை அப்பட்டமான முறையில் துஷ்பிரயோகம் செய்ததை அந்த அமைப்புக்கள் நினைவுபடுத்தின. ஹெலிகொப்டர்கள் உட்பட அரச வாக னங்களை அந்த அரசாங்கங்கள் எந்தவித மான தயக்கமும் இல்லாமல் பயன்படுத் தியதுடன் அபிவிருத்த நட வடிக்கைகள் என்ற அடிப்படையில் தங்களது கட்சிக ளின் உறுப்பினர்கள் செலவு செய்வதற்கு பெருமளவு நிதி யையும் அவை ஒதுக்கீடு செய்தன.

முன்னைய அரசாங்கங்களில் இருந்து தெளிவான முறையில் வேறுபட்டதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடந்து கொள்வதுடன் புதிய அரசியல் கலாசா ரம் ஒன்றை உருவாக்குவதை விரும்புகி றது.

புதிய அரசாங்கத்தை அமைப்பதில் மற்றைய கட்சிகளுடன் கைகோர்ப்பதற்கு காட்டும் வெறுப்பின் மூலமாக முன்னைய அரசாங்கங்களில் இருந்து தங்களது அர சாங்கம் வேறுபட்டது என்பதை தேசிய மக்கள் சக்தி தெளிவாக வெளிக்காட்டு கிறது. அரசாங்கத்தின் மேன்மையான திட்டங்களுக்கு ஆதரவ ளிக்கப் போவதாகவும் அதற்காக அர சாங்கத்தில் இணைந்துகொள்ள விரும்பு வதாகவும் முண்டியடித்துக்கொண்டு கூறுகின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களில் எவருக்கும் அரசாங்கத்தில் எந்த பதவி யையும் கொடுக்கப் போவதில்லை என்று அரசாங்கத்தின் முன்னணி பேச் சாளர்கள் வெளிப்படையாகவே கூறு கிறார்கள்.

பாராளுமன்ற தேர்தலுக்கு பிறகு புதிய அரசாங்கத்தை அமைக்கும்போது ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்கு மாத்திரமே அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகு மார திசாநாயக்க தெளிவாகக் கூறியிருக் கிறார்.

**போதுமான பிரதிநிதித்துவம்**

அழைப்பு விடுக்கப்பட்டால் அமைச் சர்களாக அரசாங்கத்தில் இணைந்து கொள்ள தயாராயிருப்பதாக மற்றைய கட்சிகளின் உறுப்பினர்கள் பகிரங்கமா கவே தங்கள் விருப்பத்தை வெளிப்படுத் துவதற்கு பதிலளிக்குமுகமாகவே ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மாத் திரமே அமைச்சர்களாக நியமிக்கப்படுவர் என்றுஅரசாங்கம் அறிவித்தது. அரசாங் கத்தில் இணைந்து கொள்வதற்கான தங்க ளது விருப்பத்தை ஜனாதிபதி திசாநாயக் கவே ஏற்றுக் கொண்டிருப்ப தாகக் கூட மற்றைய கட்சிகளைச் சேர்ந்த சிலர் கூறு வதனைரயும் காணக்கூடியதாக இருக்கி றது.

ஆனால், உடனடியான கடந்த காலத தில் பதவியில் இருந்த இரு அரசாங்கங்க ளைச் சேர்ந்த உறுப்பினர்களில் எந்த வொருவரையும் தனது அரசாங்கத்தில் சேர்த்துக்கொள்ளப் போவதில்லை என்று ஜனாதிபதி பிரத்தியேகமாக கூறியிருக்கி றார் என்பது கவனிக்கத்தக்கது. வாய்ப் புக்கள் வரும்போது ஒரு கட்சியில் இருந்து இன்னொரு கட்சிக்கு தாவுகின்ற நடைமு றையை நிராகரிப்பதே ஜனாதிபதியின் அந்த அறிவிப்பின் அடிப் படையாகும்.

தங்களுக்கு பெருமளவு ஆற்றல் இருப் பதாக உணருகிறவர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது அவர்கள் தங்களது பணிகளின் தாக்கத்தை பெருக்குவதற்கு அரசாங்கத் தில் இணைய விரும்புகிறார்கள். மறுபு றத்தில், அதே அரசியல் தலைவர்கள் ஆட்சிமுறையைப் பொறுத்தவரை மிக வும் மோசமான கடந்த காலத்தைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஊழல்வாதிகளாகவும் குற்றச் செயல்களுக்கு பொறுப்புக் கூறாதவர் களாக தண்டனையில் இருந்து விலக்கு பெற்றவர்கள் போன்று செயற்பட்டது டன் நிர்ணயிக்கப்பட்ட செயன்முறையை பின்பற்றி நடக்காதவர்களாகவும் இருக்கி றார்கள்.

அதனால் அவர்களுடனும் பழைய தலைமுறை அரசியல்வாதிகளுடனும் ஒரு தூரத்தை பேணுவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விரும்புகிறது. அனேகமாக அவர்களில் சகலருமே ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான வர்களாகவும் அவர்களில் கூடுதல் பலம் பொருந்தியவர்கள் கொலையைச் செய்து விட்டுக்கூட தண்டனையில் இருந்து தப்பி வாழக்கூடியவர்களாகவும் இருக் கிறார்கள்.

ஆனால், நாட்டுக்கான தீர்மானங் களை எடுப்பதற்கு சொந்த கட்சியில் தங்கியிருப்பது உசிதமானதல்ல. இலங்கை ஒரு பல்லின, பல்மத, பல் மொழி மற்றும் பல்சாதிகளைக் கொண்ட ஒரு சமூகமா கும். தேசிய மக்கள் சக்திக்குள் தீர்மா னத்தை எடுக்கும் மையக்குழு அவர்களை நேரடியாக பிரதிநிதித்துவம் செய்யும் ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும். ஆனால், இந்த மையக்கு ழுவில் இருப்பவர்கள் பெருமளவுக்கு வெளியில் தெரியாதவர்களாகவும் பெரும்பான்மைச் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள்.

கோட்பாட்டு அடிப்படையில் அவர் கள் சகலரும் சமத்துவமானவர்கள் என்ற மார்க்சிய நம்பிக்கையை கொண்டவர் களாக இருந்தாலும் கூட, இன,மத சிறு பான்மைப் பிரதிநிதித்துவம் செய்யக் கூடியவர்களா என்ற கேள்வி எழுகிறது. ஒரு குழுமத்தைச் சேர்ந்தவர்கள் ஏனைய குழுமங்களைச் சேர்ந்தவர்களின் தேவை களையும் அபிலாசைகளையும் முழுமை யாக விளங்கிக் கொள்வது சிரமமா னது என்பதால் தீர்மானங்களை மேற் கொள் வதில் போதுமான பிரதிநிதித்துவம் அத் தியாவசியமாகிறது.

**நிலைத்திருக்கும் வல்லமை**

இன்னமும் தீர்வு காணப்படாமல் இருக்கும் மூன்று தசாப்தங்களுக்கும் அதி கமான கால வன்முறை இனமோ தலை அனுபவித்த ஒரு நாடு என்ற வகையில் அரசாங்கத்தில் இன, மத சிறுபானமைச் சமூகங்களின் போதுமான பிரதிநிதித்து வத்தை உறுதிசெய்யும் விவகாரம் முதல் நிலை முக்கியத்துவத் துக்கு உரிய ஒன்றாக கையாளப்பட வேண்டியது அவசியமாகும்

அதே போன்றே, பெண்களுக்கான குறைந்தது 25 சதவீத ஒதுக்கீடு அரசியல் விவாதத்தின் ஒரு அங்கமாக மாறியிருக் கும் நிலையில் அரசியலில் பெண்களுக்கு போதுமான பிரதிநிதித்துவத்தை வழங் கும் விவகாரமும் அக்கறையுடன் கையா ளப்படவேண்டியது அவசியமாகும்.

அரசாங்கம் முன்னுரிமை கொடுத்து கவனிக்கவேண்டிய வேறு பல பிரச்சி னைகள் இருக்கும். ஆனால், இன, மத சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநி தித்துவம் உயர்மட்டத்தினால் தெரிவு செய்யப்படுவதாக இல்லாமல் மக்களி னால் தெரிவு செய்யப் படுவதாக இருக்க வேண்டியது அத்தியாவ சியமா னது.

உறுதியானதும் சுதந் திரமானதுமான சிறு பான்மைப் பிரதிநி தித்துவம் இல்லா மல் இருப்பதை அரசாங் கத்தினால் எடுக்கப்பட்ட சில ஒப்பனை நடவடிக் கைகளில் காணக்கூடிய தாக இருக்கிறது. யாழ்ப்பாண விமானநி லையப் பகுதியில் சுமார் மூன்று தசாப்தங்களாக மூடப்பட் டிருந்த வீதி ஒன்று அண்மையில் திறக் கப்பட்டது.

ஆனால், அந்த பகுதி யில் வாழும் மக்கள் கடு மையான வறுமை யில் வாழ்கிறார்கள். குன்றிய அபிவிருத் தியைக் கொண்டதாக வும் அந்த பகுதி இருக்கிறது. இந்த பிரச்சினை களை தணிப்பதற்கு அந்த வீதி திறப்பு எந்த விதத்திலும் உதவப்போவ தில்லை. அந்த வீதி அதன் முடிவில் விசேடமான எந்த வொரு இடத்தையும் இணைக்க வில்லை. தங்களது வாழ்க்கை முறையில் எந்தவிதமான முன்னேற்றத்துக்கு அல்லது வாழ்க்கை வாய்ப்புக ளுக்கு வழிவகுக்கக் கூடியதாக அந்த வீதியை வடக்கில் உள்ள மக்கள் பார்க் கவில்லை.

பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒழிப் பது தொடர்பிலான அதன் நிலைப் பாட்டை தேசிய மக்கள் சக்தி மறுதலை யாக்கியது வடக்கிலும் கிழக்கிலும் உள்ள மக்களுக்கு மனச்சோர்வைக் கொடுத்திருக்கிறது. அதன் கடுமை காரணமாக கொடூரமான சட்டம் என்று அழைக்கப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தை தங்களை துன்புறுத்துவதற்கும் அடக்கியொடுக்குவதற்கும் பயன்படுத் தப்படும் ஒரு ஆயுதமாகவே தமிழ், முஸ் லிம் மக்கள் பார்க்கிறார்கள்.

சிங்கள மக்கள் வேறுவிதமாக இந்த பிரச்சனையைப் பார்க்கிறார்கள். அதா வது அவர்களில் பெரும்பாலானவர் கள் நாட்டினதும் மக்களினதும் தேசிய பாது காப்பை உறுதிப்படுத்துவதற்கு மிகவும் பயனுடைய ஒரு ஏற்பாடாக பயங்கர வாத தடைச்சட்டத்தை கருது கிறார்கள். இதன் காரணத்தினால் தான் வேறுபட்ட கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இடையில் அதிகாரப் பகிர்வு அத்தியாவசியமா கிறது. அவ்வாறு செய்யப்படும் பட்சத் தில் உள்ளக விவாதங்களை அடிக் கடி நடத்தி நாட்டையும் அதன் சட்டங்க ளையும் பற்றி அவர்களால் மீள்சிந்தனை யைச் செய்யக்கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3,359...

முகாமைத்துவ நிலையத்திற்கு 2 ஆயிரத்து 346 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 22 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 35 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அறுகம்குடா...

அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், அமெரிக்கத் தூதரகம் விடுத்த பயண எச்சரிக்கையை மீளாய்வு செய்ய வேண்டும் என்று அரசாங்கம் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தது.

இதையடுத்து பயண எச்சரிக்கையை தளர்த்தியுள்ள அமெரிக்க தூதரகம், "அமெரிக்க பிரஜைகள் அனைவரும் இலங்கைக்கான பயண எச்சரிக்கையை மீளாய்வு செய்யவேண்டும். எச்சரிக்கையை கடைப்பிடிக்கவேண்டும். உங்கள் சுற்றுச்சூழல் குறித்து தெரிந்து சந்தேகத்துக்கிடமான நடவடிக்கைகள் குறித்து உள்ளூர் அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும். நிலைமை சரியில்லை என உணர்ந்தால் அங்கிருந்து வெளியேறுங்கள். எப்போதும் தொடர்பாடல் வசதிகளை பேணுங்கள், உள்ளூர் பத்திரிகைகள், ஊடகங்களை பயன் படுத்துங்கள்", என்று தனது மக்களை அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## தமிழ்மக்கள்...

அரசாங்கங்கள், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அமைய வேண்டிய தமிழர் தேசத்துக்கான அரசியல் தீர்வை நிராகரித்தும் "ஒற்றையாட்சி கட்டமைப்பை" தொடர்ந்து திணித்தும், ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையால் உருவாக்கப்பட்ட சர்வதேச விசாரணை மற்றும் பொறுப்பு கூறலுக்கான பொறிமுறைகளை நோக்கிய தீர்மானங்களை நிராகரித்தும், தமிழின அழிப்பை புரிந்தவர்களுக்கான பொறுப்புக்கூறலை நிராகரித்தும் வந்துள்ளனர். தற்போதைய அரசாங்கமும் இவ்வாறான பாதையில் பயணிக்க முனைவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எனவே, தமிழின அழிப்புக்கான அனைத்துலக பொறுப்புக்கூறல் மற்றும் பரிகார நீதி, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான அரசியல் தீர்வு என்பவற்றை ஏற்றுக்கொண்டு இவற்றை அடைவதற்காக உழைப்பதிலும், அத்தோடு தமிழ் மக்கள் ஒரு தேசமாக அடையாளப்படுத்தப்படுவதற்கு ஆதாரமாக இருக்கின்ற சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் அனைத்து கூறுகளின் சிதைவை தடுத்து நிறுத்துவதிலும் அவற்றை மீள்கட்டுமானம் செய்வதிலும், அர்பணிப்போடும் உண்மையாகவும் மற்றும் சொல்லிலும் செயலிலும் கடைப்பிடிக்கக்கூடிய ஆளுமைமிக்க வேட்பாளர்களைக் கண்டறிந்து, அவர்களைத் தெரிவுசெய்து, தமிழ் மக்களின் தெளிவான தெரிவாக பாராளுமன்றம் அனுப்புவதே காலத்தின் தேவையாகும். அத்தகைய வேட்பாளர்களுக்கு தாயகம் மற்றும் புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் ஆதரவளிக்க வேண்டுமென கனடியத் தமிழர் தேசிய அவை கேட்டுக்கொள்கிறது.

தெரிவு செய்யப்படும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சி வேறுபாடுகளைக் கடந்து, தமிழ் தேசிய நலனை முன்னிலைப்படுத்தி, தமிழ் சிவில் சமூகத்துடனும் புலம்பெயர் தமிழ் சமூகத்துடனும் ஒன்றிணைந்து ஒரு பலமான பொது கூட்டிணைவுடன் தமிழ்த் தேசிய இனத்தின் வேணவாவை நிறைவேற்று வார்களென கனடிய தமிழர் தேசிய அவை எதிர்பார்த்து நிற்கின்றது - என்றுள்ளது. (ஐ)

## மட்டக்களப்பு...

கொண்டிருந்தனர்.

அவர்கள் பயணித்த வான் கொக்காவில் பகுதியில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. இதில் மூவர் காயமடைந்து கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மூவரும் கடந்த 11ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். இந்த நிலையிலேயே குறித்த பெண் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தார்.

இவரின் மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (ஐ-05)

## தேர்தலுக்கு...

வரை வாக்களிப்பு நடைபெறும். வாக்காளர்கள் தாமதமில்லாமல் வாக்களிக்க செல்ல வேண்டும். வாக்களிக்கச் செல்லும் போது வாக்காளர் அட்டை, அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை ஆகியவற்றை கொண்டு செல்ல வேண்டும். வாக்காளர் அட்டையில்லாதவர்கள் வாக்களிப்பு மத்திய நிலையத்துக்கு சென்று தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தியதன் பின்னர் வாக்களிக்க முடியும்.

வாக்களிப்பு மத்திய நிலையத்தில் வாக்களிப்பின்போது வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தர்களுக்கும், வாக்காளர்களுக்கும் ஏற்படும் சிரமங்களை தடுப்பதற்காகவே வாக்காளர் அட்டை வழங்கப்படுகிறது. ஆகவே, வாக்காளர் அட்டை கிடைக்கப் பெற்றவர்கள் தவறாமல் வாக்காளர் அட்டையை கொண்டு செல்ல வேண்டும்.

தாமதமில்லாமல் வாக்களிக்கச் செல்லுங்கள். வாக்களித்ததன் பின்னர் வீட்டில் இருங்கள். சிறந்த முறையில் தேர்தல் முடிவுகளை வெளியிடுவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேர்தல் சட்டத்துக்கும், நாட்டின் பொதுச்சட்டத்துக்கும் அமைய செயல்படுவது சிவில் பிரஜைகளின் பொறுப்பாகும். ஆணைக்குழு வெளியிடும் உத்தியோகபூர்வ முடிவுகள்மீது மாத்திரம் நம்பிக்கை கொள்ளுங்கள் - என்றும் கூறினார். (ஐ)

## வாக்களிப்பதற்கு...

விடுமுறை வழங்குவதில்லை என்ற முறைப்பாடு தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நடைபெறும் பாராளுமன்ற தேர்தலில் வாக்களிக்க செல்வதற்கு விடுமுறை வழங்குவதில்லை என்ற முறைப்பாடுகள் எமக்கு கிடைத்துள்ளன. அவ்வாறு எந்த நிறுவனமாவது, தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளதன் பிரகாரம், வாக்களிக்க செல்லவிருக்கும் தூரத்துக்கு அமைய தமது ஊழியருக்கு விடுமுறை வழங்காவிட்டால், அந்த நிறுவனத்தின் உரிமையாளருக்கு ஒரு மாதகாலம் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். அல்லது ஒரு இலட்சம் ரூபாய் தண்டம் விதிக்கப்படலாம். சில சந்தர்ப்பங்களில் இரண்டும் விதிக்கப்படலாம். அதனால் மக்களின் அடிப்படை உரிமையை பாதுகாக்க அனைவரும் கடமைப்பட்டுள்ளனர்.

அத்துடன், தேர்தல் பிரசார பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் பல்வேறு வழிகளில் கட்டணம் செலுத்தப்பட்ட தேர்தல் விளம்பரங்கள் பிரசுமாகி வருகின்றன. நேற்று முன்தினம் வரை இது தொடர்பாக 580 விளம்பரங்கள் பிரசுரமாகி இருப்பது தொடர்பில் எமக்கு தகவல் கிடைத்துள்ளது. இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நாங்கள் முறையிட்டிருந்தோம். தற்போது அது 80 வீதம் வரை குறைவடைந்துள்ளது. இது தவிர தனிப்பட்ட முறையில் சமூக வலைத்தலங்களில் தேர்தல் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அது தொடர்பாகவும் நாங்கள் அவதானம் செலுத்தி வருகிறோம் - என்றும் கூறினார். (ஐ)

# வாக்காளருக்கு உலருணவு பொதிகள் மன்னாரில் மூன்று பேர் கைதாகினர்!

கொழும்பு, நவ. 14

மன்னாரில் வாக்காளர்களுக்கு அரசியல் கட்சி ஒன்றால் வழங்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட ஒரு தொகுதி உலர் உணவு பொருட்கள் புதன்கிழமை மாலை மன்னார் - யாழ். பிரதான வீதியில் வைத்து அடம்பன் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் மூவர் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மன்னார் - யாழ். பிரதான வீதியில் வைத்து வாகனம் ஒன்றை சோதனை செய்தபோதே இந்தப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

பொலிஸாரின் விசாரணையில், இந்த உலர் உணவு பொதிகள் அரசியல் கட்சி ஒன்றால் வாக்காளர்களுக்கு வழங்கவென கொண்டுவரப்பட்டமை தெரிய வந்தது. இதையடுத்து, வாகனத்தின் சாரதி, உதவியாளர் என மூவர் கைது செய்யப்பட்டனர்.

அந்த வாகனத்தில் 5 கிலோ அரிசி, 2 கிலோ மா, ஒரு கிலோ சீனி சலவைத் தூள் பைக்கெற் என 290 பொதிகள் கைப்பற்றப்பட்டன. இவ்வாறு மீட்கப்பட்ட பொருட்களின் பெறுமதி சுமார் 6 இலட்சம் ரூபாய்க்கும் அதிகம் என்று தெரிய வந்துள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# புனித யாகப்பர் ஆலய படுகொலை; 31ஆம் ஆண்டு நினைவேந்தல்!



யாழ்ப்பாணம், நவ. 14

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் விமானப் படையின் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 9 பேரின் 31ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று புதன் கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி யாவிஸ் அடிகளார் தலைமையில் ஆலயத்தில் காலை திருப்பலியின் நிறைவில் உணர்வுபூர்வமாக இந்த நினைவேந்தல் நடைபெற்றது.

நினைவுத் திருப்பலியை அருட்பணி கை. கனிசியஸ் ராஜ் அடிகளார் ஒப்புக் கொடுத்தார்.

1993 நவம்பர் 13ஆம் திகதி இந்த ஆலயத்தில் விமானப் படையின் சுப்பர் சொனிக் விமானம் குண்டு வீசியது. இதில் ஆலயத்தில் செபித்துக் கொண் டிருந்த 9 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## பாராளுமன்ற...

வாக்காளர் அட்டை அவசியமில்லை. எனினும், வாக்காளர் அட்டையை கொண்டு செல்வது வாக்களிப்பதற்கு இலகுவாக அமையும்.

இதேநேரம் வாக்காளர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப் பத்திரம் அல்லது ஆட்பதிவு திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டைகளை கொண்டு செல்லுதல் கட்டாயமானது.

தேர்தலுக்காக பொலிஸார், முப்படையினர், விசேட அதிரடி படையினர் என 90 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

225 உறுப்பினர்களை கொண்ட பாராளுமன்றத்துக்கு 196 உறுப்பினர்கள் தேர்தல் மூலம் நேரடியாக தெரிவு செய்யப்படுவர். இதற்காக இன்றைய தேர்தலில் அரசியல் கட்சிகளின் சார்பில் 5 ஆயிரத்து 464 வேட்பாளர்களும் சுயேச்சை குழுக்களின் சார்பில் 3 ஆயிரத்து 357 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

கம்பஹா மாவட்டத்திலிருந்து அதிகபட்சமாக 19 பாராளுமன்ற உறுப்பினர்களும் குறைந்தபட்சமாக திருகோணமலை மாவட்டத்திலிருந்து 4 பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மக்கள் பொறுப்புடன் செயல்பட வேண்டும்!

## பொலிஸ் பேச்சாளர் கோரிக்கை




கொழும்பு, நவ. 14

**நாடளாவிய ரீதியில் 1,3421 வாக்களிப்பு மத்திய நிலையங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தேர்தல்கள் சட்டத்துக்கும், பொதுச் சட்டத்துக்கும் அமைய பொது மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். - இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பதில் பொலிஸ்மா அதிபரும், சட்டத்தரணியுமான நிஹால் தல்துவ**

தேர்தல் பணிகள் மற்றும் பாதுகாப்பு விடயங்கள் குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில் -

சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்கு பொலிஸ் உட்பட முப்படையினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். வாக்களித்தன் பின்னர் வீடுகளுக்கு செல்லுங்கள், பொது இடங்களில் ஒன்று சட்டம் மற்றும் ஒழுங்குக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுவதை இயலுமான வகையில் தவிர்த்துக் கொள்ளுங்கள். அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கும், அதனைத் தொடர்ந்து சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்கும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

வேட்பாளர் ஒருவர் வாக்காளர்களுக்கு வாக்களிப்பு மத்திய நிலையத்துக்கு செல்வதற்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது சட்டவிரோதமானது. விசேட தேவையுடையவர்கள். வயதுமுதிர்ந்தோர் ஆகியோருக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குதாயின் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகத்திடம் முன்கூட்டியதாகவே அனுமதி பெறவேண்டும்.

தேர்தல் பணிகளின் நிமித்தம் 63,145 பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் நேரடியாக கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் 3200 விசேட அதிரடி படையினரும், 6000 இணை சேவை உத்தியோகஸ் தர்களும், 11 ஆயிரம் முப்படையினரும் 12227 சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

3109 நடமாடும் சேவைகளும், வாகனச் சோதனைகளுக்காக 269 வீதி தடைகளும் அமைக்கப்பட்டுள்ளன. 1591 தற்காலிக தொழிலாளர்கள் கடமைகளுக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். பாதுகாப்பு கடமைகளுக்காக 4525 வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பொதுத்தேர்தல் பணிகள் மற்றும் பாதுகாப்பு நிமித்தம் பொலிஸார் உட்பட முப்படையினர் உள்ளடங்களாக சுமார் 90 ஆயிரம் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். தேர்தல் மற்றும் பொதுச் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வாக்களிப்பு முடிவடைந்த பின்னரும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செயற்படுத்தப்படும்- என்றார். (அ)

# குளவி தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் பலி!

கொழும்பு, நவ. 14

கண்டி புஸ்ஸல்லாவ - மெல்பட்வத்த பகுதியில் பணிபுரிந்து கொண்டிருந்த தோட்ட தொழிலாளர்கள் மீது குளவி கொட்டியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் மாலை குளவி கொட்டுக்கு இலக்காகி ஆறு பேர் காயமடைந்து கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 50 வயதுடைய மெல்பட்வத்த, புஸ்ஸல்லாவ பிரதேசத்தை சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். ஆபத்தான நிலையில் இருந்த ஒருவர் கம்பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், ஏனைய 04 பேர் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# தீயணைப்புப் படையின் விடுமுறைகள் இரத்து!

கொழும்பு, நவ. 14

2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலை கருத்திற்கொண்டு ஏதேனும் அவசரச் சூழலை எதிர்கொள்ளும் வகையில் கொழும்பு தீயணைப்பு சேவை திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களும் நேற்று முதல் நாளை வரைவிடுமுறைகள் இரத்து செய்யப்படுவதாக பிராந்திய தீயணைப்பு அதிகாரி ரோஹன நிஷாந்த சேனாநாயக்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தீயணைப்பு சேவை திணைக்கள தலைமையகம், ஹெட்டியாவத்தை, க்ரேன்ட்பாஸ், வெள்ளவத்தை கோட்டை மற்றும் மடிவெல உப நிலையங்களில் உள்ள சுமார் 300 ஊழியர்களின் விடுமுறை இரத்து செய்யப்பட்டுள்ளது.

பிரதான வாக்களிப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்படும் கொழும்பு றோயல் மற்றும் டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி மைதானங்களில் உப சேவை நிலையங்களுக்கு மேலதிகமாக இரண்டு தீயணைப்பு வாகனங்கள் மற்றும் இரண்டு அம்புலன்ஸ்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஏறக்குறைய 50 தீயணைப்பு வாகனங்கள், 12 உயிர்காக்கும் வாகனங்கள் மற்றும் 5 அம்புலன்ஸ்கள் எந்த நேரத்திலும் அனுப்பிவைக்க தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

# கை,கால்,வாய் தொற்று இலங்கையில் அதிகரிப்பு!

## மருத்துவர் தீபல் பெரேரா எச்சரிக்கை

கொழும்பு, நவ. 14

இலங்கையில் அண்மைக் காலமாக வாய், கை, பாத வைரஸ் நோய்கள் அதிகரித்து வருகின்றன.

பாடசாலை மாணவர்களிடையே இந் நோய் தாக்கம் அதிகரித்து வருவதாக லேடி ரிட்ஜ்வே மருத்துமனையின் குழந்தைகள் நல மருத்துவர் தீபல் பெரேரா கூறியுள்ளார்.

குறிப்பாக, நவம்பர், டிசெம்பர் ஆகிய குளிர் பருவத்தில் இத் தொற்று அதிகமாகப் பரவும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குழந்தைகளின் கைகள், கால்கள் அல்லது வாயில் சிறிய சிவப்பு அல்லது வெள்ளை கொப்புளங்கள், அல்லது கைகளில் பழுப்பு நிற செதில்களுடன் கூடிய சிவப்பு நிற சொறி போன்ற அறிகுறிகள் இருந்தால், இது மேலும் பரவாமல் இருக்க 4 அல்லது 5 நாட்களுக்கு குழந்தைகளை வீட்டில் வைத்து பாதுகாக்குமாறும் பெற்றோருக்கு அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார்.

சில சந்தர்ப்பங்களில் காய்ச்சல் மற்றும் டெங்குக்கான சோதனைகள் எதிர்மறையான முடிவுகளையும் தரக்கூடும் என்பதையும் சுகாதார அதிகாரிகள் அவதானித்துள்ளனர். ஆனால், இவை வைரஸ் தொற்று என்பதால் டெங்கு போன்றவை இதனுடன் தொடர்புடையதா என்பது தெளிவாக இல்லை.

மேலும் கொவி-19 நோய் குறித்தும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இதற்கிடையில் டெங்கு மற்றும் இன்புளுவென்ஸா வைரஸூடன் தொடர்புடைய பிற நோய்கள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பண்டிகை காலத்தில் முட்டை விலை 65 ரூபா வரை உயரும் அபாயநிலை!

கொழும்பு, நவ. 14

முட்டை ஒன்றின் விலை 60 ரூபா தொடக்கம் 65 ரூபா வரை அதிகரிப்பதற்கான அறிகுறிகள் தென்படுவதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உற்பத்தி சார் விலைகள் மும்மடங்கு அதிகரிப்பால் கோழி தீவனத்தை உற்பத்தி செய்ய முடியாத நிலையை அடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இன்று ஒரு முட்டையின் உற்பத்தி விலை சுமார் 38 ரூபாய். ஆனால் விவசாயி ஒரு முட்டையை 30 தொடக்கம் 31 ரூபாய்க்கு 7 ரூபாய் நட்டத்தில் விற்பனை செய்வதால் பலரும் பண்ணை உற்பத்தியை கைவிட்டுள்ளனர்.

இந்நிலையில், கிறிஸ்மஸ் பண் டிகையைமுன்னிட்டு முட்டை விலை 60 தொடக்கம் 65 ரூபாய் வரைக்கும் செல்லும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ஹோட்டலுக்கு சென்றோர்மீது தாக்குதல்; உரிமையாளர் உட்பட நால்வர் கைது!

கொழும்பு, நவ. 14

பண்டாரகம, பொல்கொட பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றிற்குச் சென்றிருந்த நண்பர்கள் குழுவைத் தாக்கி காயப்படுத்தினர் என்று கூறப்படும் ஹோட்டல் உரிமையாளர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் பாணந்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

அத்துருகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த நண்பர்கள் குழு ஒன்று பண்டாரகம, பொல்கொட பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றின் நீச்சல் தடாகத்தையும் அதனை சுற்றியுள்ள பகுதியையும் முன்பதிவு செய்து சுற்றுலாவுக்காக அங்கு சென்றுள்ளனர்.

இதன்போது, இந்த ஹோட்டலுக்கு சென்ற ஹோட்டல் உரிமையாளரின் உறவினர்கள் சிலர் நீச்சல் தடாகத்தையும் அதனை சுற்றியுள்ள பகுதியையும் தங்களுக்கு வழங்குமாறு ஹோட்டல் உரிமையாளரிடம் கூறியுள்ளனர்.

பின்னர் இந்த ஹோட்டல் உரிமையாளர் குறித்த நண்பர்கள் குழுவிடம் ஹோட்டலை விட்டு வெளியே செல்லுமாறு கூறியுள்ளார்.

இதனால் இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதுடன் ஹோட்டல் உரிமையாளரும் பணியாளர்கள் சிலரும் இணைந்து நண்பர்கள் குழுவைத் தாக்கினர் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வெளிநாட்டு தூதரகங்கள் மூலம் பிறப்பு சான்றிதழ்களை பெறலாம்!

கொழும்பு, நவ. 14

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் வசதிக்காக வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களில் இருந்து பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களின் நகல்களை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

குவைத், ஜப்பான், கட்டார் தூதரகங்கள், அவுஸ் திரேலியாவின் மெல்பர்ன், கனடாவின் ரொறன்ரோ, இத்தாலியின் மிலன், டுபாய் ஆகிய நகரங்களில் அமைந்துள்ள துணைத் தூதரகங்கள் ஊடாக இந்த முன்னோடித் திட்டம் முன்னெடுக்கப்பட வுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலிருந்தும் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சான்றிதழ் களை பெறுவதற்கு அமைக்கப்பட்டுள்ள முறைமைக்கு ஏற்ப வெளிநாட்டு தூதரகங்கள் மூலம் இந்த சான்றிதழ்களை வழங்கும் வகையில் பதிவாளர் நாயகம் திணைக்களம் மற்றும் வெளிவிவகார அமைச்சால் கூட்டாகப் பராமரிக்கப்பட்டு இ -பீ எம்.டீ தரவுக் கட்டமைப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசாங்க சேவைகளை டிஜிற்றல் மயமாக்கும் திட்டத்திற்கான பிர வேசமாக இது அமைந்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.